# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 04 திங்கட்கிழமை (17.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :52

## பொங்கு தமிழின் 4ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று நடக்கும்

யாழ்ப்பாணம்.ஜன.17

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் 4ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

பொதுச்சுடரேற்றல்,தேசியக்கோடியேற்றல், அகவணக்கம் என்பவற்றுடன் ஆரம்பமாகும் ஆண்டு நிறைவு நிகழ்வுகள், பொங்கு தமிழ் பிரகடனம் வாசித்தல் மற்றும் சிறப்புரைகள் என்பனவற்றுடன் நிறைவுறும்.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், மதகுருமார்கள்,மாணவர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர்.

### பல்கலை வளாகத்தில் மாவீரர் நினைவாலயம்

நிகழ்வின் முன்னதாக பொங்கு தமிழ் நிகழ்வின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்கலைக்கழக வளாகத்தில் மாவீரர் நினைவாலயம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெறும்.

மாவீரர் நினைவாலயம் பிரமாண்டமான முறையில் நிர்மாணிக்கப்படும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார் தெரிவித்தார். (எ-7)

## மந்திகை ஆஸ்பத்திரியில் பணிபுரிய அமெரிக்கக் கடற்படை மருத்துவக் குழு

வடமராட்சி,ஜன.17

அமெரிக்கக் கடற்படைப் பிரிவைச் சேர்ந்த மருத்துவர்கள் அடங்கிய குழு ஒன்று இன்று முதல் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மருத்துவ நிவாரணப் பணியில் ஈடுபடவுள்ளது.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணியில் ஈடுபடுவதற்காக வந்துள்ள அமெரிக்கக் கடற்படைப் பிரிவைச் சேர்ந்த மருத்துவர்கள் அடங்கிய குழுவினரே இங்கு பணியாற்றவுள்ளனர்.

வைத்திய சேவைக்குத் தேவையான மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள், சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு பொருத்துவதற்கான குளிரூட்டிகள் என்பனவும் இந்தக் குழுவினரால் எடுத்துவரப்பட்டுள்ளன.

வைத்தியசாலையைச் சுற்றிப் பார்வையிட்ட அமெரிக்க மருத்துவக் குழுவினர் வைத்தியசாலை கள நிலைவரத்தை அறிந்துகொண்டதுடன், மாவட்ட வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளையுடன் கலந்துரையாடினர்.

ஏற்கனவே மருத்துவர் பற்றாக்குறையுடன் இயங்கிவருகின்ற பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் மருத்துவமனையில் தாங்கள் பணிபுரிய இருப்பது மக்களுக்கு நன்மை அளிக்கும் என்று

(14ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேசத்தின் உதவிகள் சகல பகுதிகளுக்கும் சரிவரப் பகிரப்படுவதை உறுதிப்படுத்துங்கள்!

## ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவரிடம் தமிழ்க் கூட்டமைப்பினர் வலியுறுத்து

கொழும்பு,ஜனவரி 17

**சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த மக்களுக்கு சர்வதேச உதவிகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவரிடம் வலியுறுத்தியுள்ளனர்.**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தாட்டோ சினோ நேற்றுக்காலை தமிழ்க் கூட்டமைப்பினரை கொழும்பில் சந்தித்துப் பேசினார்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பினர் வலியுறுத்தியதாவது:-

வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக அதிக எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறான ஆயிரக்கணக்கானோரில் நூற்றுக்கணக்கானோர் யுத்தநிறுத்த காலத்திலும் அகதிமுகாம்களிலேயே தங்கியுள்ளனர். அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கப்படவில்லை. இப்போது அவர்கள் சுனாமியாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் .

அதிலும் மீனவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தகாலத்திலும் யுத்தநிறுத்த காலத்திலும் கூட அவர்களின் ஜீவனோபாயத்தை மேற்கொள்ளமுடியாதவாறு கட்டுப்பாடுகள் இருந்தன. அவர்களே அனர்த்தத்தாலும் அதிகமாகப் பாதிப்படைந்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தால் வடக்கு - கிழக்கு கரையோரத்தில் மூன்றில் இரண்டு பங்கு பிரதேசத்தில் சேதம் ஏற்பட்டுள்ளது. இவற்றுள் உயிர் சேதமும், பொருள் சேதமும் அடங்கும். ஆகவே, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சர்வதேச உதவிகள் உரிய முறையில் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படவேண்டும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் தூக்கி வீசப்பட்டு ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,ஜன.17

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் திடீரெனத் தூக்கி வீசப்பட்டதால் அதில் பயணம் செய்த ஒருவர் உயிரிழந்தார்; இன்னொருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் புத்தூர் பகுதியில் இடம்பெற்றது.

வீதியின் குறுக்கே நாய் ஒன்று ஓடியபோது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் சடுதியாக பிறேக் போட்டு வேகத்தைக் கட்டுப்படுத்த முயன்றபோதே மோட்டார் சைக்கிள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நிவாரண உதவிகள் இதுவரையில் தமிழர் பிரதேசத்துக்கு திருப்பப்படவில்லை

### தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி.ஜன.17

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை இலங்கை அரசுக்குச் சர்வதேச நாடுகள் வழங்கியுள்ளன. எனினும், இதுவரை அவை தமிழர் பிரதேசத்துக்குத் திருப்பப்படவில்லை.

- இவ்வாறு குற்றஞ்சாட்டினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

உலக உணவுத்திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜேம்ஸ் ரி.மோரிஸை சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுக்காலை கிளிநொச்சி சென்ற உலக உணவுத்திட்டப் பணிப்பாளர் புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். மோரிஸின் கிளிநொச்சி விஜயத்துக்கு அரசு முதலில் அனுமதி மறுத்திருந்தது. எனினும், இறுதி நேரத்தில் தனது இறுக்கத்தைத் தளர்த்தி அனுமதியளித்திருந்தது.

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின்போது, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புலிகள் இயக்கமும், தமிழர் புனர்வாழ்வுக் கழமும் உடனடியாகச் செய்த உதவிகளுக்கு மோரிஸ் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார்.

தகுந்த நேரத்தில் மக்களுக்குச் செய்யப்பட்ட உதவி குறித்தும், ஐ.நா.உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து புலிகள் செயற்படுவது குறித்தும் தான் மகிழ்ச்சியடைகிறார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால நிலை அறிவிப்பினால் தமிழ்மக்கள் மனங்களில் போர்ப்பீதி

கொழும்பு.ஜன.17

அரசு வெளியிட்டுள்ள அவசரகாலநிலை அறிவித்தல் மக்கள் மனங்களில் மீண்டும் போர்ப் பீதியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் நுழைவதற்கும் இந்த அவசரகாலநிலை வழிவகுத்துள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இதனால் அச்சம் அதிகரித்துள்ளது. அரசின் இந்தச் செயல் சமாதான முன்னெடுப்புகளுக்கும், யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கும் ஆப்பு வைத்துவிடும் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரச கால நிலையைப் பிரகடனப்படுத்தும் அறிவித்தலில் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டுள்ளார். உத்தியோக ரீதியாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாத நிலையி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சிறப்புப் பிரதிநிதி வடமராட்சிக்கு வருகை

வடமராட்சி.ஜன.17

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணப் பணிகளைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி மிக்கேல் பேமியோ நேற்று வடமராட்சிக் கரையோரப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டார். அவருடன் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மக்னோட் வோஸ் றோமும் வந்திருந்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் வசம் மற்றொரு விமான ஓடுபாதை; இரண்டு சிறியரக விமானங்களும் உண்டு

### இராணுவ வட்டாரங்கள் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு. ஜன. 17

விடுதலைப் புலிகள் வன்னியில் முன்னர் அமைத்திருந்தார்கள் எனக் கூறப்படும் விமான ஓடுபாதையைவிட இன்னொரு - புதிய - ஓடுபாதையைத் தற்போது அமைத்துள்ளார்கள் என்றும், அந்த ஓடுபாதையில் இரண்டு விமானங்கள் தரித்து நின்றதை விமானப் படையின் ஆளில்லா விமானம் படம்பிடித்துள்ளது என்றும் இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சித் தகவல் பரவியிருக்கிறது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் பாதுகாப்பு நிலைவரை ஆய்வாளர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த புதன்கிழமை வன்னி வான் பரப்புக்கு மேலாகப் பறந்த விமானப் படையின் இஸ்ரேல் தயாரிப்பு ஆளில்லா உளவு விமானம்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இயற்கை அனர்த்த துயர்துடைப்பு நிதியம் தேசிய எழுச்சிப் பேரவை ஆரம்பித்தது

யாழ்ப்பாணம்,ஜன.17

சுனாமிப் பேரலையால் உறவுகளையும் உடைமைகளையும் இழந்து தவிக்கும் தாயக மக்களுக்காக 'இயற்கை அனர்த்த துயர்துடைப்பு நிதியம்' ஒன்றை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆரம்பித்துள்ளனர்.

தேசிய எழுச்சிப் பேரவையின் இறுக்கமான நிதிக்கட்டுப்பாட்டு முறைகளினால் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகளின் ஊடாகவே இந்த நிதியத்துக்கான நிதிசேகரிப்பு செயற்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிதியத்தினூடாகப் பொதுமக்கள் தமது நிதிப்பங்களிப்பை இலகுவாக வழங்க முடியும் என்று எழுச்சிப் பேரவை நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுனாமிப் பேரலையால் ஏராளமான மக்கள் தமது வாழ்க்கைக்குரிய அனைத்தையும் இழந்து விட்டார்கள். மக்கள் அமைப்பு என்ற வகையில் பேரிடரின் பின்விளைவுகளிலிருந்து மக்களைப் பேணிக்காக்கவும் நம்பிக்கை ஒளியூட்டவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். அப்பொறுப்பை சீரியதாக முன்னெடுக்க நிதி மிகவும் அவசியமானது.

இந்த அடிப்படையில் சுனாமி பேரிடர் களைவதற்காக - மக்களது துன்பங்களைத் தாங்கி அவர்களுக்கான எதிர்கால வாழ்க்கையை அமைத்துத் தருவதற்காக - இங்குள்ள மக்களினதும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளினதும் ஒத்துழைப்புடன் இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியத்திற்கு நிதிப் பங்களிப்பை வழங்க விரும்பும் உறவுகள் மக்கள் வங்கி பிரதான வீதி, யாழ்ப்பாணக் கிளை கணக்கு இல. 107-012026 இற்கும், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு கிராமிய வங்கியில் இல. 11719 என்ற கணக்கு இலக்கத்திற்கும் மற்றும் பிரதேச ரீதியாக உள்ள தேசிய எழுச்சிப் பேரவைக் காரியாலயங்களிலும் வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இருபது லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதிசேகரிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் நிதிப்பங்களிப்பை இந்நிதியம் எதிர்பார்த்துள்ளது. (ஐ-ரி)



ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையால் ஆரம்பிக்கப்பட்ட இயற்கை அனர்த்த துயர்துடைப்பு நிதியத்திலிருந்து ஐந்து லட்சம் ரூபா கிழக்கு மாகாண மக்களின் மருத்துவ தேவைகளுக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது. தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் மட்டு, அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் பானுவிடம் பணத்தைக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## சுனாமியால் பாதிப்புற்ற மேலும் ஒரு பெண் மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.17

'சுனாமி' அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களில் மேலும் ஒரு பெண் நேற்றுமுன்தினமிரவு உயிரிழந்துள்ளார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த அன்ரன் செல்வராணி(வயது40) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

மந்திகை வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சையின் பொருட்டு கடந்த முதலாம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சைக்குட்படுத்திய நிலையில் மரணமானார்.

இவருடன் சேர்த்து யாழ். போதனா வைத்தியசாலையில் இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டு இறந்தோரின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது. இங்கு சிகிச்சையின் போது மரணமான 7 பேரும் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (10-15)

## காவல்துறைப் பணியகத்திலும் கிட்டு நினைவு நிகழ்வுகள்

கிளிநொச்சி,ஜன.17

வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் நினைவு தின நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி காவல்துறை நடுவப் பணியகத்தில் சிறப்பாக நடைபெற்றன.

நடுவப் பணியக கண்காணிப்பாளர் சி.மாதவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட கண்காணிப்பாளரும் பிரதம பரிசோதகருமான செ.தனஞ்செயன் பொதுச் சுடரினை ஏற்றினார்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றினார்.

காவல்துறைப் பரிசோதகர் பொ.பவானி திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை ஏற்றினார்.

உருவப் படங்களுக்கான மலரஞ்சலியைத் தொடர்ந்து அகவணக்கம், உறுதியுரை என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வில், காவல்துறை கண்காணிப்பாளர்கள், பிரதம பரிசோதகர்கள், பரிசோதகர்கள், உப பரிசோதகர்கள், காவல்துறை உறுப்பினர்கள் போராளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-204)

## 18 அடி நீளமான சுறா மீன் பாஷையூர் கடலில் சிக்கியது

### 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டதாம்!

மண்டைதீவு,ஜன.17

யாழ்ப்பாணக் கடல் நீர் ஏரியில் பாஷையூர் கடலை அண்டிய பகுதியில் பதினெட்டு அடி நளமான பாரிய சுறா மீன் ஒன்று நேற்று அதிகாலை பிடிக்கப்பட்டது.

கிழக்கு அரியாலைப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த பாஷையூர் மீனவர் ஒருவரின் களங்கட்டி வலையில் இந்த சுறாமீன் சிக்கி இருந்ததாகவும் மீனவர்கள் அதிகாலையில் சென்றபொழுது 'பட்டி' வலையை பிய்த்துக் கொண்டு வேலி வலையோரம் வெளிப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக அருகில் உள்ள மீனவர்களின் உதவியுடன் பிடித்துக் கரையேற்றப்பட்டது.

இந்தப் பெண் சுறா 'கொண்டையன்' இனத்தை சேர்ந்ததென்று மீனவர்கள் தெரிவித்தனர்.

அது குருநகர் - சின்னக்கடை மீன் சந்தைக்கு எடுத்துவரப்பட்டது.

அங்கு 50 ஆயிரம் ரூபாவுக்கு அந்தச் சுறா சந்தை வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.

இதை வெட்டிய பொழுது இரண்டரையடி நீளமான 16 குட்டிகள் அதன் வயிற்றில் இருந்தன.

இதன் செட்டைகள் மட்டும் ரூபா 30 ஆயிரம் பெறும்தியானவை என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதன் தலைமட்டும் ஒரு பெரிய தொலைக்காட்சிப் பெட்டியைப் போல் இருந்தது. சுறா மீன்களில், மீன்சுறா, கள்ளச்சுறா, பால்சுறா, கொம்பன்சுறா, வேளச்சுறா என பல வகைகள் உள்ளன. இவை கரைக்கு வருவதில்லை என்றும் -

களங்கட்டிவலையில் பாரியசுறா பிடிபட்டது இதுவே முதல் தடவை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(த-88)

## கடலகவள ஆசிரியருக்கு மாதாந்தக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜன.17

கடல் வள தொழில்நுட்பப் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்குரிய மாதாந்தக் கொடுப்பனவுகளை எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் யாழ். கல்வி வலயத்திலுள்ள மாவட்டக் கல்வி மேம்பாட்டு பேரவை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கே.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடல்வள தொழில்நுட்பப் பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்கள் மாதாந்த வரவினை உறுதிப்படுத்திய கடிதத்துடன் சமுகமளிக்க வேண்டும் என்றும் - தெரிவித்துள்ளார். (எ-13)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணப் பொதிகள்

கரவெட்டி,ஜன.17

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களின் முதல் தொகுதி இன்று முதல் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

வடமராட்சியில் தங்கியுள்ள மாணவர்களுக்கு உபகரணங்கள் அடங்கிய இரண்டாயிரத்து 220 பொதிகள் விநியோகிக்கப்படும்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை சென். தோமஸ் பாடசாலை, அலட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றிற்குப் பொதிகள் வழங்கப்படும்.

இதேவேளை -

நலன்புரி நிலையங்களாகச் செயற்பட்டு வந்த அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலை, தம்பசிட்டி அ.த.க.பாடசாலை, புற்றளை மகாவித்தியாலயம் ஆகியனவற்றில் இன்று கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கல்விச் சேவைச் செயலகத்தின் உதவியுடன் வடமராட்சி கல்விப்பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

வல்வை சிவகுரு வித்தியாசாலை மாணவர்களுக்கு மூன்று தனியார் வீடுகளில் வகுப்புக்கள் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(ஐ-70)

## கொரிய சர்வமத ஒத்துழைப்பு நிலையத்தின் பிரதிநிதிகள் மூவர் நேற்று யாழ். வந்தனர்

வடமராட்சி,ஜன.17

இலங்கைக்கான கொரிய தூதரகத்தின் அனுசரணையுடன் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் மூவர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்தனர்.

இவர்கள் நேற்றுப்பகல் 11 மணியளவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேசத்துக்குச் சென்று அங்குள்ள இடங்களைப் பார்வையிட்டதுடன் பாதிப்புற்ற மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி முகாம்களுக்கும் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார்கள்.

அத்துடன் சுனாமி அனர்த்த புனர்வாழ்வுக் கூட்டுச் செயலணி அலுவலகத்துக்குச் சென்று, அங்கு யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, செயலணியின் பிரதம இணைப்பாளர் ரி.பாலையா, இணைப்பாளர் எஸ்.விக்னேஸ்வரன் மற்றும் இமையவன் ஆகியோருடன் கலந்துரையாடினார்கள்.

இக்கலந்துரையாடலின்போது சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மேம்பாட்டுக்கென திட்டமொன்றைத் தாம் மேற்கொள்ளவுள்ளதாக மேற்படி பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதன் முதற்கட்டமாக சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

யங் ஏக் டோ ஆகிய மூன்று பிரதிநிதிகளே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தவர். (10-70-173)








சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருதொகுதியினருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் வழங்கப்பட்ட நிதியை கழக உறுப்பினரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.நந்தகுமார் வயோதிபர் ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம் : வடமராட்சிச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# நீங்கா நினைவில் 'பொங்கு தமிழ்' நிகழ்வு

ஈழத் தமிழரின் வரலாற்றில் இந்த மிலேனியம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அரசியல் நிகழ்வு ஒன்றின் நினைவு நாள் - ஆண்டு நிறைவு நாள் - இன்றாகும்.

ஒரு முக்கியமான வரலாற்றுக் கட்டத்தில் சரித்திரத் தேவையாக - கட்டாயமாக - எழுந்த 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வின் நான்காம் ஆண்டு நிறைவு நாளே இன்று.

கொடூரப் போரின் பேரழிவுகள், இராணுவ நெருக்கு வாரங்கள், இயல்பு வாழ்க்கைக்கு எதிரான கெடுபிடிகள், இனக் குரோத நடவடிக்கைகள், ஆயுதக் கும்பல்களின் அடாவடித் தனங்கள், சுயநல அரசியல்வாதிகளின் பித்தலாட்டங்கள் போன்றவற்றுக்கு மத்தியில் -

பௌத்த சிங்களப் பேரினவாதிகள் வீசி எறியும் எலும்புத் துண்டுகளுக்காக வாலாட்டும் நாய்கள் போல சில அரசியல் தற்குறிகள் தாமே தமிழினத்தின் பிரதிநிதிகள் என்று உலகுக்குக் காட்டிக்கொண்டு அரசியல் பித்தலாட்டங்களில் ஈடுபட்டு, பிச்சை போலப் போடப்படும் அரசியல் பதவிகளுக்காகத் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து, அடிமை வாழ்வில் அவ்வினத்தைத் தொடர்ந்து மூழ்கச் செய்ய முயன்ற போது -

இத்தனை அழுத்தங்களுக்கும் நெருக்குவாரங்களுக்கும் இடையில் தமிழர் தம் அடிமனத்தில் புதைந்து, உறைந்து கிடந்த தம் அபிலாஷைகளை - விருப்பத்தை - அவாவை - எதிர்பார்ப்பை - உள்ளக்கிடக்கையை - வெளிப்படுத்தும் ஓர் ஊடகமாகப் பீறிட்டுப் பாய்ந்தது 'பொங்கு தமிழ்'.

ஈழத் தமிழினத்தின் உரிமைக்கான போராட்டம் உக்கிரம் பெற்று, சர்வதேச விவகாரமாக உருவெடுத்த போது அவர்களின் பிரச்சினைக்கு சர்வதேச மத்தியஸ்தத்தில் - மூன்றாம் தரப்பு அனுசரணையோடு சமாதான வழியில் - அமைதி முறையில் - தீர்வு காண்பதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்ற அழுத்தம் சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் மிலேனியம் ஆண்டுப் பிறப்போடு வலுவாக வெளிப்படத் தொடங்கியது.

அந்தக் காலகட்டத்தில் ஈழத் தமிழர்களுக்கு அவர்களது அபிலாஷையை நிறைவு செய்யும் தீர்வு ஒன்று வழங்குவதாயின், அந்த அபிலாஷை என்னவென்று கேள்வி எழுந்தது. தமிழரின் அபிலாஷை பற்றி வரையறை செய்ய வேண்டிய நியதி ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல் கட்சிகளும் தலைமைத்துவங்களும் தம்தம் விருப்பப்படியும் தான்தோன்றித்தனமாகவும் தமிழரின் அபிலாஷை இன்னதுதான் என்று வியாக்கியானம் கூறமுற்பட்ட காலகட்டத்தில்தான் -

ஈழத்தமிழர்களின் அபிலாஷைகளை - சுதந்திரமாக - சுயாதீனமாக - அச்சமின்றி - ஒருமித்த குரலில் - வெளிப்படுத்தவும் அடையாளப்படுத்தவும் மக்கள் மத்தியிலிருந்து முகிழ்ந்தது பொங்கு தமிழ் எழுச்சி.

ஈழத்தமிழரின் சிரசு போன்ற குடாநாட்டில் - அவர்களின் மூளையாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் - அவர்களுடைய இளம் அரசியல் சக்தியான யாழ்.பல்கலைக் கழகத்தில் - ஒரு சிறு பொறியாகத் தோன்றிய பொங்கு தமிழ், விஸ்வரூபமாய் வியாபித்து இலங்கையில் மட்டுமல்லாமல் தமிழர் வாழும் - புலம் பெயர்ந்துள்ள - நாடுகள் அனைத்திலும் வெளிப்பட்டு, பெரும் சக்தியாக உலகத் தமிழர் உள்ளம் எங்கும் பேரதிர்வையும் பெரும் சிந்தனை மாற்றத்தையும் எழுச்சி உணர்வையும் தோற்றுவித்தது.

2001 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி - தைப் பொங்கலை ஒட்டி - யாழ்.பல்கலைக்கழகத்தில் பொங்கிய தமிழரின் அதிர்வுகள் இன்னும் ஈழத் தமிழரின் போராட்ட மன உணர்வை விடாது கிளறிக்கொண்டே இருக்கின்றன என்பது நிதர்சனம்.

கடந்த பொதுத் தேர்தலின்போது தமிழர் தாயகத்தில் ஈழத்தமிழர்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஐக்கியப்பட்டு - ஒன்றிணைந்து - தாங்கள் அபிலாஷையை வெளிப்படுத்தவும் தங்கள் ஏகோபித்த ஆணையை சர்வதேசச் சமூகத்துக்குப் பறைசாற்றவும் தங்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளை ஒரேகுரலில் அடையாளப்படுத்தவும் அவசியமான ஒன்றிப்பு உணர்வை ஏற்படுத்திய காரணிகளுள் 'பொங்கு தமிழ்' நிகழ்வின் அதிர்வுக்குக் கணிசமான பங்கு உண்டு என்பதை யாவரும் அறிவர்.

அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அன்று வெளிப்பட்ட பொங்குதமிழ் உணர்வே, உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தில் ஈழத்தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்ட சக்தியாய் திரண்டு நிற்கின்றார்கள் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்துவதற்கு உதவிற்று என்பதும் கவனிக்கத்தக்கது.

போராளிகள் தமது போராற்றலையும் பேராற்றலையும் பொங்கி எழுந்து வெளிப்படுத்தி, தமது பலத்தை நிரூபித்தமை போல -

பொதுமக்களும் சத்திய மார்க்கத்தில் பொங்கி எழுந்து தங்களின் மன ஓர்மத்தையும், உறுதியையும் இந்தப் பொங்கு தமிழ் மூலம் வெளிப்படுத்தி, விடுதலைப் போராட்டத்துக்கு அளவிலா வலுச் சேர்த்தனர்.

இந்தப் பொங்கிய மன உணர்வு தமிழர் தம்மனதில் அடங்கிப்போய்விடவில்லை; சோர்ந்துபோய்விடவில்லை. அது அடிமனதில் புதைந்து கனன்று கொண்டிருக்கின்றது. வேளைவரும்போது அது பீறிட்டுப் பொங்கிப் பிரவகித்து, விஸ்வரூபம் எடுத்து எங்கும் வியாபிக்கும் - அடக்குமுறையும் ஏமாற்றுதல்களும் தொடர்ந்தால்.

# காங்கேசன்துறை எரிபொருள் நிலையத்தை யாழ்.நகருக்கு இடம்மாற்ற நடவடிக்கை

அரியாலை.ஜன.17

சுனாமி பேரனர்த்தத்தால் சேதமடைந்துள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பும் களஞ்சியத்தை யாழ்.நகருக்கு விரைவில் இடம்மாற்றி வைப்பதற்கான முழு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இருந்து வருகைதந்த கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகமே, சந்தைப்படுத்தல் முகாமையாளர் யஸ்டின் சில்வா உட்பட கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் காங்கேசன்துறைக்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பும் களஞ்சியத் தொகுதியைப் பார்வையிட்டனர்.

இந்தக் குழுவினர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியதோடு, காங்கேசன்துறையில் அமைந்திருக்கும் எரிபொருள்கள் நிரப்பும் களஞ்சிழித்தை யாழ்.நகரை அண்டியதாக ஸ்ரான்லி வீதியில் 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் இயங்கி வந்த இடத்திற்கு மீண்டும் இடம்மாற்றி வைப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்தனர்.

இந்தக் களஞ்சியம் மீண்டும் ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலக வளாகத்திற்கு இடம்மாற்றி வைப்பதன் மூலம் குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கான எரிபொருள்கள் சிரமம் இன்றி விநியோகிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-17)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்திய அரசின் உதவிகள்

## இராமகிருஷ்ண ஆச்சிரமம் வழங்குகின்றது

வடமராட்சி.ஜன.17

இந்திய அரசினால் வழங்கப்பட்ட சுமார் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட நிவாரணப் பொருள்கள் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் இடம்பெயர்ந்தோருக்கு பங்கிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

சமைத்த உணவுப் பொதிகள், உலர் உணவு வகைகள், உடுபுடைவைகள், பாலுணவுகள், பாத்திரங்கள், பாய்கள், கூடாரங்கள், மருந்துவகைகள் என்பன இந்நிவாரணப் பொருள்களில் அடங்கியுள்ளன.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திருமதி நிருபமாராவ் சில தினங்களுக்கு முன்னர் பருத்தித்துறைக்கு நேரடியாக வந்து இந்நிவாரணப் பொருள்களை சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தாவிடம் கையளித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இப்பொருள்கள் இடம்பெயர்தவர்களுக்குப் பங்கிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

மருந்துப் பொருள்கள் பற்றாக்குறையாக உள்ள வைத்தியசாலைகளுக்கு மருந்துப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-173)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவ தமிழ் மாணவர் ஒன்றியம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.17

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டும் நடவடிக்கையை யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான செய்திக் குறிப்பு ஒன்றை யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் எதிர்காலக் கல்வி நலனை மேம்படுத்தும் பொருட்டு தமிழ் மாணவர் ஒன்றியம் 'சுனாமி கல்வி நிவாரணப் பணி' என்னும் செயல்திட்டத்தை முன்னெடுத்தமை யாவரும் அறிந்ததே.

இந்தப் பணி மூலம் மாணவர்களுக்கான பாடசாலைக் கற்கை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் சீருடைத்துணிகள் என்பன யாழ்.குடாநாட்டில் ஒன்றியப் பிரதிநிதிகளாலும், மாணவர்களாலும் சேகரிக்கப்பட்டன.

நிவாரணப் பணியின் போது சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் பாதிக்கப்பட்ட மாணவர்களின் அத்தியாவசியத் தேவைகளையும் கல்வித் தேவைகளையும் பூர்த்திசெய்வதற்காக மாணவர் ஒன்றியத்தினரால் நலன்புரி முகாம்களில் வாழும் மாணவர்களின் கல்வித் தேவைகள் தொடர்பாக ஆராயப்படுவதோடு, அவர்களின் தரவுகளும் சேகரிக்கப்படுகின்றன.

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வசிக்கும் மாணவர்கள் "இல. 155, கோயில் வீதி, கம்பன் கோட்டத்திற்கு முன்பாக, நல்லூர்' என்ற முகவரியில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-5)

# இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பாடசாலைகளை இயக்க ஏற்பாடு

வடமராட்சி.ஜன.17

வடமராட்சி வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள பாடசாலைகளை அடுத்த வாரம் முதல் மீள இயங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளில் தங்கியுள்ள மக்கள் தமது வீடுகள் சேதமடையாவிட்டால் தமது வீடுகளுக்குச் செல்வதற்கும் வீடுகள் சேதமடைந்திருந்தால் கடற்கரைகளுக்கு அப்பால் உள்ள மேட்டு நிலங்களில் கூடாரங்கள் அமைக்கப்பட்டு அக் கூடாரங்களுக்கும் அனுப்பப்படவிருக்கின்றனர்.

இப்பிரதேசங்களில் சுனாமி பேரலை அனர்த்தத்தால் 31 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. அவற்றையும் தற்காலிகமாகத் திருத்தியோ அல்லது தற்காலிகக் கொட்டில்களை அமைத்தோ இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் உளவளம் பாதிக்கப்படாமல் இருப்பதைக் கவனத்தில் கொண்டே பாடசாலைகளை மீள இயங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக வடமராட்சி வடக்கு கடற்றொழில் கூட்டுறவுச்சங்க சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார்.

(த-173)

# பாதிப்புற்ற மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம்.ஜன.17

யுனிசெவ் நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளது.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக 2 ஆயிரத்து 280 மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(4-204)

# அலையில் சிக்கிய இரு சிறுமிகள் அபூர்வமாக தப்பியது எப்படி?

யாழ்ப்பாணம்.ஜன.17

அண்மையில்நடந்த சுனாமி அனர்த்த நிகழ்வின் போது அதிசய சம்பவங்கள் இடம்பெற்றதான செய்திகள் பலஅவ்வப்போது வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

இதுவும் அப்படியானதொரு சம்பவம் தான். மணற்காட்டுப் பகுதியில் சுனாமி தாக்கிய வேளையில் இரண்டு சிறுவர்கள் அபூர்வமான முறையில் காப்பாற்றப் பட்டிருக்கின்றனர்.

தம்பித்துரை சுகன்யா (வயது 7), தம்பித்துரை சசிரூபன் (வயது 02) ஆகிய இரு சகோதரர்களுமே இவ்வாறு காப்பாற்றப்பட்டவர்கள்.

சம்பவதினம் இவ்விரு சிறுவர்களும் வீட்டிலேயே இருந்துள்ளனர். சுனாமி அலைவந்துகொண்டிருந்த செய்தியறிந்து அவசரத்தில் வீட்டிலிருந்த மற்றவர்கள் வெளியில் ஓடித்தப்பிவிட சிறுவர்கள் இருவரும் வீட்டினுள் தனியாகச் சிக்கிக்கொண்டனர்.

கடல் வெள்ளம் ஊரையே அடித்துச் சென்ற பின்பு உறவினர்கள் பிள்ளைகளைக் காணாத ஏக்கத்துடன் தேடியோடினர்.

ஆனால், எல்லோரும் ஆச்சரியப்படுமாறு அச்சிறுவர்கள் இருவரும் தமது வீட்டின் இடிபாடுகளுக்கு மத்தியில் இருந்து அழுதுகொண்டு வெளியே வந்தனர்.

சிறுவர்களைக் கண்டு ஆச்சரியத்துடன் எப்படித் தப்பினீர்கள் என்று கேட்டனர் ஊரவர்கள். அதற்கு அந்தச் சிறுவர்கள் கூறிய பதிலைக் கேட்டு உறைந்தே போய்விட்டனராம்.

"கடல் வெள்ளம் வந்த போது எம்மை ஓர் அம்மா மேலே தூக்கியவாறு இருந்தார். அந்த அம்மா எங்களைக் கீழே இறக்கி விட்டு மறைந்து விட்டார். ஆனால், அவரை நான் ஒருநாளும் கண்டதில்லை..." என்று தமது திகில் அனுபவத்தைச் சொன்னாள் சிறுமி த.சுகன்யா.

இந்நிலையில், தமக்கு அருகில் கோயில் கொண்டிருக்கும் அன்னை வேளாங்கன்னியே இவ்வாறு தமது பிள்ளைகளைக் காப்பாற்றினார் என்று அவ்வூர் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

(த-15-ரி)

# கால்நடைப் பண்ணைகள் அழிந்திருந்தால் உரிமையாளர்கள் தொடர்புகொள்ளலாம்

வடமராட்சி.ஜன.17

சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கால்நடைப் பண்ணைகள் தொடர்பான விவரங்களைத் திரட்டுவதற்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இவ்விவரங்களைத் திரட்டுவதன் மூலம் எதிர்காலத்தில் கால்நடை வளர்ப்புத் தொடர்பான புனர்வாழ்வுத் திட்டங்களைத் தடுப்பதற்கு இதுபேருதவியாக அமையும் என திணைக்களம் எதிர்பார்க்கிறது.

வடமராட்சியில் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் புலோலியில் உள்ள பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் விவரங்களைக் கொடுத்து உதவலாம் என கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.

(த-173)

## நாளை

*தை 05*
*(18.01.2005)*
*செவ்வாய்க்கிழமை*
திதி : *நவமி*
*முழுவதும்*
நட்சத்திரம் : *அச்சுவினி*
*பிற்பகல் 12.34 வரை*
சுபநேரம் : *11.05 - 12.35*
[illegible]
[illegible]

## உதயவாக்கு

வாழ்நாளில் இனியபருவம் இளமை. இதனை நாம் முதுமை யில்தான் உணருகின்றோம்.
- கிளேடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்

குயின்ஸ் அழகுக்கலை நிலையத்தினால் நடத்தப்படும் மூன்றுநாள் பயிற்சி வகுப்புகள் 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய், புதன்)

**குயின்ஸ் அழகுக்கலை நிலையம்,**
மானிப்பாய் வீதி, ஒட்டுமடம்

என்னும் முகவரியில் காலை 9.00 - மாலை 5.00 மணி வரை நடைபெறும். மூன்று தினங்களிலும்

Bleaching (3Types) Facial (3Types) Waxing, Eyebrow thrading, Henacandine, Pack போடுமுறை Surcb தயாரிக்கும் முறை, முக அழகுச் சிகிச்சைக் குறிப்புக்கள் மேலதிகமாக Sareetasseling, Saree Pleating கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம் கற்பிக்கப்படும். பயில விரும்புவோர் மேலதிக விவரங்களுக்கு:

**செல்வி ப.குயின்ரா 0776159468.**

ஏனைய பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.

(40911) (26-14-18)

# கண்ணீர் அஞ்சலி

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியால்ய
பகுதித் தலைவர் திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளை**

அவர்கள் 14-01-2005 வெள்ளிக்கிழமை இயற்கை எய்தியமையையிட்டு வருந்துகிறோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள்.

மீசாலை வீ.ம.வி.,
சாவகச்சேரி (40909)(26-14-18)

# 11ஆவது சிரார்த்த தினம்

தோற்றம்
12 - 07 - 1918



மறைவு
19 - 01 - 1994

**அமரர் வைரமுத்து கந்தப்பிள்ளை**

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கோப்பாய்)
திதி: தை பூர்வபக்க அட்டமி
ஆண்டுகள் பதினொன்று கடந்திடினும்
உங்கள் நினைவுகளுடன் வாழும்....

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (சி-40466)(26-14-18) - குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கருவில்
14 - 12 - 1935



சிவனடியில்
29 - 01 - 2004

**அமரர் பரநிருபசிங்கம் பரம்சோதி**

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்
RRAN மாவட்ட இணைப்பாளரும்)

சிவன் அவன் உன்சிந்தையுள்
நின்ற அதனால் பண்பினனாய்
சிறந்த சமூகசேவகனாய் பாசமலராய்
பரம்சோதி பாரில் சீர்நிர்வாகனனாய்
மஹேசபவன சுடர் ஒளியாய்
இளவல்களின் நல்வாழ்வுக்காய்
ஊதுவர்த்தியாகிய புன்சிரிப்பினாய் தவமே
ஆண்டொன்று உருண்டாலும் - என்றும்
உமது சுகந்தம் சுவாசிக்கப்படுகிறது.

'மஹேசபவனம்',
163, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (40918)(26-14-18)

உங்கள் நினைவில்:
மனைவி, மக்கள்.




# ASIAN COMPUTERS
## வழங்கும் சிறப்புச் சலுகை

**Diploma in Desktop Publishing**
காலம் : 3-4 மாதங்கள்

**Diploma in Web Design**
காலம் : 3-4 மாதங்கள்

மேலே குறிப்பிடப்பட்ட பாடநெறி ஒன்றில் இணைந்து கணிப்பொறி அச்சுக்கோப்பு (DTP)மற்றும் டிசைனிங் பற்றிய விரிவான கையேடு ஒன்றை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்



**இச்சலுகை 31-01-2005 வரை மட்டுமே.**

# ASIAN COMPUTER SYSTEMS

| | | | |
|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். © 021-222 5677 | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) © 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. © 0773-12213 | கண்டி வீதி, சாவகச்சேரி. © [illegible] |


# ஒத்துமாறல்

கொழும்பு தெஹிவளையில் ரெவனியூ இன்ஸ்பெக்ரராக நியமனம் பெற்ற ஒருவரும் வவுனியா தெற்கில் இயங்கும் வடக்குப் பாடசாலையில் நியமனம் பெற்ற ஆசிரியர் ஒருவரும் யாழ்.மாவட்டத்தில் எத்துறையினராயினும் நியமனம் பெற்ற இருவருடன் ஒத்துமாற விரும்புகின்றனர். 0777 - 159237
021 - 222 - 7729.
T.P. 0776 089145. (40908)

## அனலைதீவு அபிவிருத்திக்கு கனடாக் கிளை உதவி

ஊர்காவற்றுறை,ஜன.17

அனலைதீவு கலாசார ஒன்றியக் கனடாக் கிளையினால் வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 29 ஆயிரம் ரூபா மூலம் அனலைதீவு கிராமிய வைத்தியசாலைக்கு முக்கியமாகத் தேவைப்பட்ட ஒரு தொகுதி மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டன.

மேலும் இந்த நிதி மூலம் அனலைதீவு சதாசிவ வித்தியாலயத்திற்கு இரண்டு புதிய கணனிகள் பெற்று வழங்கப்பட்டதுடன் ஆசிரியர் அறையும் திருத்தி அமைக்கப்பட்டது.

அத்துடன், அங்குள்ள நான்கு முன்பள்ளி நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், நூல்கள் கொள்வனவு செய்வதற்கும் அனலைதீவு மத்திய சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்வதற்கும் மேற்படி ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியுள்ளது.

அனலைதீவு கலாசார ஒன்றியத்தின் கனடா கிளையின் பிரதிநிதிகளான வை.நடராசா, அ.பரஞ்சோதி ஆகியோரின் ஊடாக இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (4-203-16)

## பலியானோருக்கு அஞ்சலி; பருத்தித்துறையில் சுவரொட்டிகள்

வடமராட்சி,ஜன.17

சுனாமி அனர்த்தத்தால் பலியான உறவுகளுக்கு அஞ்சலி தெரிவித்து பருத்தித்துறைப் பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த அஞ்சலி சுவரொட்டிகளில் 26 டிசெம்பர் 2004 என கறுப்பு மையினால் தலைப்பிட்டு "அலை கடலின் ஆவேசத்தால் உயிர் பிரிந்த உறவுகளே உங்களுக்கு எங்கள் அஞ்சலிகள்" உயிரிழந்தவர்களின் உறவுகள் பருத்தித்துறை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சிடப்பட்ட இச்சுவரொட்டிகள் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. (4-175)

## சுனாமியின்போது பலியான சிப்பாயின் மரண விசாரணை

வடமராட்சி,ஜன.17

சுனாமிப் பேரலை அனர்த்தத்தின்போது மரத்துடன் அள்ளுண்டு உயிரிழந்த இராணுவ வீரரான மொறவக்கவைச் சேர்ந்த ஜி.எம்.எஸ். திலகரட்ணவின (வயது35) மரண விசாரணையை பருத்தித்துறை பதில் நீதிவான் சபா. ரவீந்திரன் பலாலியில் வைத்து மேற்கொண்டார்.

சகவீரர் இறந்தவரை அடையாளம் காட்டினார். விசாரணை முடிவில் சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (4-173)

## கியூடெக் நிறுவனத்தின் நடமாடும் மருத்துவ சேவை

சுனாமி கடற்பூகம்பத்தினால் பெரும் பாதிப்பிற்குள்ளாகி முல்லைத்தீவு, வடமராட்சி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களின் உள்ள மக்களிற்கான நடமாடும் மருந்துவ சேவையினை 'கியூடெக்' நிறுவனம் ஆரம்பித்துள்ளது. அந்த நிறுவனத்தின் இயக்குநர் ஜெயக்குமார் இத்தகவலைத் தெரிவித்துள்ளா. (4-190)

## பின்னால் வந்து தாக்கிவிட்டு இரவில் பணம் அபகரிப்பு

வியாபாரத்தை முடித்துக்கொண்டு இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒருவரை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்துவந்த மூவர் அவரை அடித்துத் தாக்கி 6ஆயிரம் ரூபா ரொககப் பணம், அதற்கான கணக்குப் பதிவுப் பத்திரங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் சிலவற்றினையும் பறித்தெடுத்துக்கொண்டு தலைமறைவாகினர்.

கோப்பாய்க்கும் இருபாலைக்குமிடையில் கடந்த இருநாள்களுக்குமுன் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோப்பாய் பனம்பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க நீர்வேலிக் கிளையில் சிட்டை லிகிதராக வேலைசெய்பவரான சுண்டுக்குளியைச் சேர்ந்த நா.தர்மலிங்கம் (வயது 56) என்பவரே பொருளையும் இழந்து படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-15)

# Vacancies – Immediate
## Translators with medical Background

The ICRC has vacancies for the above positions to support the sub-delegation in various Humanitarian programmes in Puthukkudiyiruppu and Kilinochchi areas, in accordance with ICRC security regulations.

We are looking for highly competent and experienced translators. The candidate should have the following qualifications:

**Requirements:**
- Team spirit, reliability and professional commitment
- High motivation and willingness to learn, resistance to stress
- Good command of English, spoken and written
- Relevant professional experience
- Good computer and reporting skills
- Valid driving permit is an asset

**Tasks:**
- Oral translation between the doctor - patient / nurse - patient and vise versa
- Written translation of documents and forms
- Oral translation in meetings and training sessions
- Taking of written minutes of meetings

Salary : Depending on qualifications and experience

Suitable candidates are requested to contact ICRC Kilinochchi office with the CV on or before Wednesday (19.01.2005) and make an appointment with the Administrator.

**ICRC Office,**
**16, Depot Rd, Kanagapuram, Kilnochchci.**
**TP: 021-2285940, 0712296680**

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**

# Vacancies - Immediate
## Drivers

The ICRC has vacancies for the above positions to support the sub-delegation in various Humanitarian programmes in Puthukkudiyiruppu and Kilinochchi areas, in accordance with ICRC security regulations.

We are looking for highly competent and experienced drivers. The candidate should have the following qualifications:

- ☒ be experienced, confident and safe Drivers
- ☒ possess a valid (Class A) Sri Lankan Driving Licence
- ☒ speak and be able to understand English
- ☒ have knowledge of basic vehicle maintenance

**Job Description:**
- ☒ to drive Land cruisers for the different ICRC programmes
- ☒ to drive the truck to support the ICRC work
- ☒ to carry out checks and emergency maintenance on vehicles
- ☒ to use HF/VHF radio within the vehicle

Salary : Depending on qualifications and experience

Suitable candidates are requested to contact ICRC Kilinochchi office with the CV on or before Wednesday(19.01.2005) and make an appointment with the Administrator.

**ICRC Office,**
**16, Depot Rd, Kanagapuram, Kilnochchci.**
**TP: 021-2285940, 0712296680**

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**

# மரண அறிவித்தல்

**திருமதி மனோகரன் ஜெயவதனி(சுதா)**



கல்வளை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பாரிஸ், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோகரன் ஜெயவதனி (சுதா) 14.01.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகம் - நாகேஸ்வரி (பபா) தம்பதியினரின் அருமை மகளும் மனோகரனின் அன்பு மனைவியும் கஜானன், அபிராமி ஆகியோரின் அன்புத் தாயும் சுப்பிரமணியம் - தங்கம்மா அவர்களின் அன்பு மருமகளும் சத்தியவதனி (பிரான்ஸ்), பிறேமவதனி (இந்தியா), சத்தியசீலன் (பிரான்ஸ்), ஜெயசீலன் (பிரான்ஸ்), கேமவதனி, நிர்மலா (புதுக்குடியிருப்பு), உதயசீலன் (உதயன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரரத்தினம், பாஸ்கரன், குகதாஸ், குமுதினி, திருமகள் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.01.2005 புதன்கிழமை பாரிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.சண்முகம்
(தந்தை).

கல்வளை,
சண்டிலிப்பாய். (40913)(39-14-18-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் குடியமர்வுடன் தொழில்வாய்ப்பும் தேவை!

கடந்த 26 ஆம் திகதி இயற்கை அன்னையின் கோரத் தாண்டவ சுனாமி கடற்பூகம்பத்தினால் இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசங்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு தொடக்கம் வடமராட்சி கிழக்கு வரையான கரையோரப்பகுதிகள் சுனாமியால் முற்றாக அழிந்துவிட்டன.

தமிழீழத்தின் 90 வீதமான பொருளாதாரத்தை பெற்றுத்தரக்கூடிய இந்த கடற்றொழிலாளர்கள் சொந்தமாகத் தொழில் மேற்கொள்ள சுனாமி மிச்சமாய் எதனையும் விட்டுவைக்கவில்லை.

முல்லைத்தீவு தொடக்கம் வடமராட்சி கிழக்கு வரையான பகுதிகளில் உள்ளவர்களைக் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுகூட சர்வதேச சமூகம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கரங்களில்தான் உள்ளது.

இதுவரை காலமும் சுனாமி தாக்கம் தென்னாசியாவின் இலங்கை போன்ற நாடுகளை தாக்காது என நம்பியிருந்தோம். அண்மைய நிகழ்வு அனைவருக்கும் இனிமேல் காலங்களிலும் அச்சத்துடன் வாழவே செய்துள்ளது.

கடந்த காலங்களில் திட்டமிடப்படாது மக்களை குடியேற்றப்பட்டுள்ளதால் தான் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக கடந்த 7 ஆம் திகதி முல்லை நகரை மீளக் கட்டியெ ழுப்புவது சம்பந்தமாக முல்லைத்தீவில் யாழ்ப்பாணப பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அதில்

**கேசவன்**
**(விசுவமடுச் செய்தியாளர்)**

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கூறியதாவது:-

கடந்த காலங்களில் திட்டமிடப்படாத பகுதிகளில் ஐஸ்கட்டித் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அரச அதிகாரிகளிடம் வசதியானவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மக்களின் குடியிருப்புகளுக்குள் இவற்றைக் கட்டியபோது வசதி குறைந்தவர்கள் இருப்பிடங்களை இழந்து கள்ளப்பாடு போன்ற இடங்களில் குடியேறினர்.

அந்தப் பகுதி கடல்கொண்டு போகும் என்பது ஏற்கனவே வலியுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு அணைகட்டுமாறு அறிவுறுத்தப்பட்டு தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டன.

இனிமேல் காலங்களில் அவ்வாறான தவறுகளினை தடுப்பதற்குத் திட்டமிடல் குழுவில் அங்கம் வகிப்போர் இந்த பிரதேசங்களில் தங்கி நிலைகொண்டு செயலாற்றவேண்டும் என்று தெரிவித்தார்.

தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்டுளவர்களின் நலன்புரி நிலையங்களாகச் சில பாடசாலைகள் உள்ளதால் இந்தப் பாடசாலைகள் இயங்குவது மிகவும் சிரமமாகவுள்ளது. சில பாடசாலைகள் இயங்காமலும் உள்ளன.

அத்துடன், இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியில் பாடசாலைகள் சில முற்றாக அழிந்துள்ளன. பாதிக்கப்பட்ட பகுதி மாணவர்களின் கல்வியும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பாடசாலை செல்ல உடனடியாக வழி செய்யப்படவேண்டும்.

புயல், மழை, வெயில் விமானங்களின் மற்றும் கடற்படையின் தாக்குதல்களுக்குள்ளும் மனம் சோராது கடற்தாயே நீதான் எங்கள் சொந்தம், சொத்து, எல்லாமே எனப் படகு ஏறிச் சென்றவர்கள் இன்று நலன்புரி நிலையங்களில் மாமர நிழல்களின் கீழ் மௌனமாய்... அடுத்து என்ன செய்வது என்ற சிந்தனையுடன்...

இப்போ எங்களுக்கு ஏதாவது ஒரு இடத்தில் சின்னக் குடிசையும் தொழில் செய்யுறதுக்கும் வழி கிடைத்தால் போதும் அதுவும் கொஞ்சப்பேருக்கு சேர்த்து செய்தாலும் பறவாய் இல்லை. வாறதை பங்குபோடுவோம். அப்பிடித்தான் நாங்கள் வாழ்ந்தனாங்கள், என்றார் - நல்லமுத்து என்ற கடற்தொழிலாளி.

இவை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பாதிக்கப்பட்ட பிரதேசங்களை சரியான தூரநோக்குடன் திட்டமிட்டு புனரமைக்க வேண்டியதன் அவசியம் அனைத்துத் தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலைகளிலும் மற்றும்பொது இடங்களிலும் தங்கவைக்கப்பட்டவர்களை சரியான ஓர் இடத்தில் குடியமர்த்தி தொழில் முயற்சி ஏற்படுத்திக்கொடுக்க செயலணிக்குழுக்களுடன் தமிழீழ கடற்படையினரும் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இதற்கான திட்டங்களை முன்மொழிவுகளுடன் தயாரித்து நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இதன்படி இவற்றுக்கான ஒவ்வொரு திட்டங்களினையும் ஒவ்வொரு நிறுவனங்கள் பெறறுள்ளன. எல்லா செயற்பாடுகளும் அவர்களின் வேகமான செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளன.

★

| முல்லைத்தீவில் ஆரம்பகட்ட மதிப்பீடுகளின்படி சேத விவரம் | |
|---|---|
| உயிரிழந்தோர் | 1938 |
| மாணவர்கள் | 800 |
| முற்றாக அழிந்த கிராமங்கள் | 38 |
| முற்றாக அழிந்த தேவாலயங்கள் | 13 |
| முற்றாக அழிந்த பள்ளிவாசல் | 01 |
| முற்றாக அழிந்த இந்துக் கோயில்கள் | 16 |
| காணாமற்போனோர் | 1062 பேர் |
| முற்றாக அழிந்த வீடுகள் | 3400 |
| பாடசாலைகள் | 14 |

பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக குடியிருப்புகள் அமைக்கப்படும் இடங்கள் (முல்லைத்தீவு)

| பாதிக்கப்பட்ட இடங்கள் | குடும்பங்கள் | தெரிவுசெய்யப்பட்ட இடம் |
|---|---|---|
| 01. வலையர்மடம் | 45 | வலையர் மடத்தின் பாதிக்கப்படாத பகுதி |
| 02. செம்மலை/நாயாறு | 100 | சபாரத்தினம் தோட்டம் |
| 03. வண்ணாங்குளம் | 200 | ஐஸ்கட்டி தொழிற்சாலை |
| 04. கோயில்குடியிருப்பு/முல்லைப் பட்டினம் | 100 | முல்லைநகரின் பாதிக்கப்படாத பகுதி |
| 05. மணற்குடியிருப்பு | 200 | கரைச்சி குடியிருப்பு |
| 06. கள்ளப்பாடு | 360 | உண்ணாப்பிலவு அரச தனியார் காணி |
| 07. சிலாவத்தை தெற்கு/தியேகுநகர் | 80 | சுவாமி தோட்டம் |
| 08. அளம்பில் வடக்கு | 200 | அளம்பில் பெருந்தோட்டப் பகுதி |
| 09. சிலாவத்தை தீத்தக்கரை | 100 | அன்னம்மாள் கோயிலடி அருகில் |
| 10. முள்ளிவாய்க்கால்/பனையடி | 80 | முருகன்கோயிலடியிலும் |
| 11. அம்பலவன் பொக்கணை/மாத்தளன் | 170 | மாத்தளன் பிள்ளையார் கோயிலடி |
| 12. உப்புமாவெளி | 25 | உப்புமா வெளி பொது நோக்கு மண்டபத்தடி |
| 13. செல்வபுரம் | 225 | செல்வபுரத்திலும், வட்டுவாகலிலும் |

# செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சிக் கிளையில் புதிய கற்கை நெறி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட மாணவர்களினதும் அலுவலர்களினதும் தகவல் தொழில்நுட்பத்திறனை விருத்திசெய்யும் திட்டத்தின் கீழ் 'யாவர்க்கும் கணனிக் கல்வி' என்ற அடிப்படையில் இக்கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜீ.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான 3 மாத கற்கை நெறியும் இவற்றுள் உள்ளடங்கும்.

இக்கற்கை நெறிகள் யாவும் இம்மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-405-204)




# விசர்நாய் கடித்த இருவர் ஆஸ்பத்திரியில்

கிளிநொச்சி,ஜன.17

விசர்நாய் ஒன்று ஒரேநாளில் இருவரைக் கடித்துள்ளது.

இச்சம்பவம் கிளிநொச்சி கந்தசாமி கோயில் வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த பி.சாளினி, கே.கல்பனா (வயது 18) ஆகிய இருவருமே மேற்படி விசர்நாய்க்கடிக்கு இலக்காகினர்.

இவர்கள் இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (04-203-305)

# ஜெயபுரம் ஆலயத்தில் அறநெறிப்பாடசாலை

ஜெயபுரம் வல்லவாம்பிகா சமேத வர சித்தி விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபையினர் ஏற்பாட்டில் ஆலயக்குருக்கள் கைலை இராஜேஸ்வர் தலைமையில் ஆலயத்தில் அறநெறிப் பாடசாலை ஒன்றை நடத்திவருகின்றனர்.

அறுபது மாணவர்கள் கல்வி கற்றுவரும் இப் பாடசாலையில் 3 ஆசிரியர்கள் கடமை புரிந்து வருகின்றனர்.

இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு அறநெறிக்கோட்பாடுகள், சமயப் பாரம்பரியங்கள் ஆலய வணக்கமுறைகள் என்பவற்றைப் போதிப்பதுடன் அறநெறிப் பாடத்திட்டத்திற்கமைவாக வகுப்புகளும் நடைபெற்றுவருகின்றன. (4-203-323)

# முல்லைத்தீவுக்கு 10 புல்டோசர்கள் அனுப்பிவைக்க அமைச்சர் உறுதி

புதுக்குடியிருப்பு,ஜன.17

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசத்தில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்குத் தற்போது அவசியமாகத் தேவைப்படும் 10 புல்டோசர்களை அனுப்பிவைப்பதற்கு வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் இசார் பதுதீன் உறுதியளித்துள்ளார்.

கடந்த வாரம் அவர் முல்லைத்தீவிற்குச் சென்றிருந்தார். அங்கு பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டதுடன் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்தார்.

பின்னர் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசையைச் சந்தித்துக் கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் 10 லட்சம் ரூபா நிதியில் மக்களின் பாவனைக்குத் தேவையான உணவு அல்லாத பொருள்கள் ஒரு தொகுதியினையும் செயலணிக்குழுவிடம் ஒப்படைத்தார்.

தொடர்ந்து முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தைப் பார்வையிட்ட அவர், அவர்களின் வேண்டுகோளின்படி சமாசம் மீண்டும் இயங்கவும், சேதமடைந்த பொருள்களை திருத்திச் செப்பனிடுவதற்கும் தேவையான உதவிகளைத் தான் பெற்றுத் தருவதாகவும் கூறினார். (4-203-353)

# முல்லை. அரச செயலகம் மீண்டும் சொந்த இடத்தில்

புதுக்குடியிருப்பு,ஜன.17

சுனாமி அலைகளால் பாதிப்புக்குள்ளான முல்லைத்தீவு மாவட்ட அரச செயலகம் கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கி வருகிறது.

'சுனாமி' அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த அரச செயலக செயற்பாடுகள் யாவும் பிரிவுத் தலைவர்களின் தலைமையின் கீழ், தனியார் வீடுகளிலும் கட்டடங்களிலும் இயங்கி வந்தன.

பின்னர், மாவட்டச் செயலகம் துரித கதியில் துப்புரவு செய்யப்பட்டதையடுத்து மீண்டும் சொந்த இடத்தில் இயங்குகின்றது. (4-353-204)

# பூநகரிக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் சுனாமியால் பாதிப்புற்றோருக்கு நிதியுதவி

பூநகரி,ஜன.17

பூநகரிக்கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்கள்,ஆசிரியர்கள் அனைவரும் தலா 2 ஆயிரத்து 500 ரூபாவை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பு நிதிக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது தொடர்பாக கிளிநொச்சி, பூநகரி மகாவித்தியாலயத்தில் கடந்த 4ஆம் திகதி கோட்டக்கல்வி அலுவலரின் தலைமையில் பூநகரிக் கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதன்போதே துயர்துடைப்பு நிதியாக தமது ஊதியத்தில் இருந்து 2 ஆயிரத்து 500 ரூபாவை வழங்க அவர்கள் முன்வந்துள்ளனர். (4-203-323)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியின் நூலகத்தை திறக்கக் கோரிக்கை

பரந்தன்,ஜன.17

கிளிநொச்சி மத்திய கல்லூரி நூலகத்தை மாணவர் கல்விச் செயற்பாட்டுக்கு ஏற்றவகையில் புனரமைத்து விரைவில், திறக்குமாறு பாடசாலை அதிபரிடம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்பாடசாலையின் நூலகம் எவ்வித வசதிகளுமின்றி, மாணவர் கல்விச் செயற்பாட்டிற்குப் பயன்படாதவாறு புத்தகங்கள் யாவும் சிதிலமடைந்து காணப்படுகிறது.

இதனையே மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு ஏற்றவகையில் புனரமைத்துத் திறக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரால் இப்பாடசாலை மாணவர் பயன்பாட்டிற்கென 10 கணனிகள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (4-352-204)

# கிளிநொச்சி மருத்துவமனைகளுக்கு வைத்தியர்களை நியமிக்க ஏற்பாடு

பரந்தன்,ஜன.17

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு சுற்றயல் கூற்று மருத்துவமனைகளுக்கு 4 வைத்தியர்களை நியமிக்க நடவடிக்கை மேற கொள்ளப்பட்டுள்ளது எனக் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகப் பிரதிநிதி தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட சுகாதார நிலைமைகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று கிளிநொச்சி அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு, பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட ஸ்கந்தபுரம் கிராம சேவை உத்தியோகத்தர்களால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுவதால் நோயாளர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் சிகிச்சை பெறுவதற்காகத் தனியார் வைத்திய நிலையங்களை நாடிவருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதுவிடயத்திற்கு பதிலளிக்கும் முகமாகவே பிரதி மாகாண சுகாதார சேவை அலுவலகப் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (08-352-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 ஆம் ஆண்டு நீங்காத நினைவுகளில்.........





கப்டன் மித்திரன்
சின்னையா சிவஜீவன்
தாயின் மடியில் 23-08-1978
தாயக மண்ணில் 17-01-1999

சின்னையா சிவதாசன்
தாயின் மடியில் 18-12-1976
தாயக மண்ணில் 08-11-1998

இப்போதும் எம் கண்ணில் ஈரமது காயவில்லை
எப்போதும் உம் நினைவால் இதயமது துடித்திருக்க
தப்பேதும் செய்யா நீங்கள்
எம்மைத் தவிக்க விட்டுச் சென்றதென்ன?
நீங்காத நினைவால் தூங்காத கண்களுடன்- நாம்
ஏங்காத நேரங்கள் இல்லை - என்றும்
உங்கள் நினைவில் வாழ்ந்திருக்கும்

சொந்த முகவரி: சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (40779)
தற்காலிகமுகவரி: 525, கொக்குவில் வீதி, திருக்கோவில். (39-14-26)
சோதரி ஜெயாநிதி சிவானந்தன் (ஆசிரியர்) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 - 02 - 1931



விண்ணில் 17 - 01 - 2004

**அமரர் இராஜரட்ணம் சொலமன் இராஜகிளி**

(இளைப்பாறிய பொறுப்பாளர், மரத்திணைக்களம், யாழ்ப்பாணம்)

" தக்கார் தகவிலர் என்பது
அவரவர் எச்சத்தால் காணப்படும்"


அன்போடு அரவணைத்து ஆதரித்த தெய்வமே!
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
என்றும் உம் நினைவு எங்களுடனே வாழும்.

எமது அன்புத் தெய்வத்தின் நினைவாக இன்று (17.01.2005) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு பரி அன்னை அலெக்சான்ட்றா ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உம்நினைவாக...
திருமதி இராஜகிளி றோஸ் (மனைவி- லண்டன்)
பிள்ளைகள்,
ராஜன் (ஜேர்மனி), ஆனந்தி (லண்டன்),
நிஷாந்தி (லண்டன்).

52, மார்ட்டீன் றோட், யாழ்ப்பாணம்.
(40869)(39-14-26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் கிருஸ்ணன் தர்மலிங்கம்**

புவியரங்கம் 25-06-1955 விண்ணரங்கம் 19-12-2004

*அன்னாரின் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை (18.01.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து வைபவத்தில் கலந்து அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

மடத்தடி, நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி. [40875][39-14]
மனைவி: த. லக்ஷ்மி,
பிள்ளைகள்.

## ச.ச.சமாஜக் கூட்டம்

வட்டுக்கோட்டை,ஜன.16

வலிகாமம் மேற்குப் பிரதேச. சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலிமேற்கு பிரதேசசபைத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டு சனசமூக நிலையங்களுக்கான மூலதன நன்கொடைக் காசோலையும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-161)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.17

உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமிகள் கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (3-15)

★ ★ ★

மானிப்பாய் வடக்கு உச்சியோடை பெரிய தம்பிரான் ஆலய சம்புரோட்சன மகாகும்பாபிசேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.36 மணி முதல் 11 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

இத்தினம் பிற்பகல் பூசையின் பின் அன்னதான நிகழ்வு இடம்பெறும். (3-90)

★ ★ ★

வட்டுக்கோட்டை,ஜன.17

வட்டுக்கோட்டை உலக்கைப் பளைச்சி வீரபத்திரர் சமேத பத்திர்காளி அம்பாள் ஆலய ரதோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிமை காலை 10.30 மணிக்கு நடைபெற்று மாலை 6 மணிக்குத் தீர்த்த உற்சவம் நடைபெறும். சுவாமி வீதியுலா வரும் திருக்காட்சியும் நிகழும். (4-161)

## அச்சுவேலி மக்கள் முல்லைக்கு உதவி

அச்சுவேலி,ஜன.17

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு அச்சுவேலி, பத்தைமேனி மக்களால் சுமார் 5 லட்சம் பெறுமதியான உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி, பத்தைமேனி மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள், உடை மற்றும் இதர பொருள்கள் என்பனவே விடுதலைப் புலிகளின் உதவியுடன் முல்லைத்தீவுக்கு எடுத்துச்செல்லப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டன. (3-5-11)

## நலன்புரி நன்மைக் கூட்டம்: விவரங்கள் சேகரிப்பு

வட்டுக்கோட்டை,ஜன.17

யாழ்.மாவட்டத்தில் நலன்புரி நன்மைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு நிதி திட்டமிடல் அமைச்சு நலன்புரி நன்மைச் சபையுடன் இணைந்து கணக்கெடுப்பாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் விவரங்களைத் திரட்டிவருகின்றது.

வலி.மேற்குப் பகுதியில் கணக்கெடுப்பாளர்களுடன் சமுர்த்தி அலுவலர்களும் இத்தகைய விவரங்களை வீடுகள் தோறும் சென்று சேகரித்து வருகின்றனர்.

இத்தகைய புள்ளிவிவரங்கள் மூலம் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களுக்கு 2005 ஆம் ஆண்டுமுதல் சமுர்த்தி நன்மை உதவிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-161)

## இலங்கைக்கு உதவ 48 நாடுகள் தயார்; நிதியமைச்சர் தகவல்

கொழும்பு,ஜன.17

சுனாமி அனர்த்தத்தால் அழிவடைந்த பகுதிகளை மீளப் புனரமைக்க உதவிகளை வழங்குவதற்கென 48 நாடுகள் முன்வந்துள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவுவது தொடர்பாக நடைபெற்ற மாநாட்டிலேயே இத்தகவலை வெளியிட்டுள்ளதாக நிதியமைச்சர் தெரிவித்தார்.

இந்த உதவிகள் யாவும் ஐக்கியநாடுகள் அமைப்பின் ஊடாகவே இலங்கைக்குக் கிடைத்திருப்பதாகவும் -

நாட்டின் சமாதானம் மேலும்மேலும் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் சர்வதேச உதவிகள் அதிகரிக்கும் என்றும் - நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (4-13)

## வேலை வாய்ப்பு

01. எலற்றிக் வெல்டர்
02. லேத் மென்
03. பயிலுநர்கள்

பயலுநர்களுக்குத் தேசிய தொழிற்பயிற்சி சபையூடாகச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படும்.

தொடர்பு:
லிங்கோ நுண்பட்டறை
109, சட்டநாதர் வீதி, நல்லூர். (40861)

## வைத்தியம்

சிறுநீரகக் கோளாறுகள், ஆஸ்மா, நீரிழிவு, அஜீரண கோளாறுகள், வாயுக்கோளாறுகள், இரத்த அழுத்தம் போன்ற சகல விதமான ரோகங்களிற்கு அருமருந்தாகவும் பொதுநோய் எதிர்ப்பு நிவாரணியாகவும் பாவிக்கக்கூடிய "காந்தநீர்" (Magnetic water) எம்மிடம் பெறுக்கொள்ளமுடியும்.

எதுவித பத்தியங்களோ மருந்துகளோ இன்றி அக்குபங்சர் சிகிச்சை அளிக்கும் ஒரே வைத்தியசாலை

**ஷென்மென் அக்குபங்சர் வைத்தியசாலை**

தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

(40798)(26-14)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 - 04 - 1915



மறைவு 17 - 01 - 2004

**அமரர் பொன்னம்பலம் பொன்னுத்துரை**

(முன்னாள் உபதபாலதிபர், அல்லைப்பிட்டி)

எங்கள் அன்பின் தந்தையே!
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
ஆண்டொன்று ஆனதையா!!
என்றும் பாசத்தால் உங்களை
நெஞ்சில் தீபமாய் ஏந்துகின்றோம்!

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (40857)(39)

## இலங்கை அரசு
## வடக்கு – கிழக்கு மாகாண சபை

இரண்டாவது வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப் - II)

கடன் இல. 3935 C.E.

தேசிய கூறுவிலை கோரல் [நிர்மாண வேலைகள்]

## கேள்வி அறிவித்தல்

1. இரண்டாவது வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாகச் சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின்கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (IBRD) கடன் வசதி ஐ.டீ.ஏ. (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.
2. பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் கிளிநொச்சி அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1,000/=ஐ காசாக கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் செலுத்தி 16-02-2005 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | இக்ராட் தரம் (கட்டடம்) |
|---|---|---|---|
| NEIAP - II/IRA/RE/01 | இரணைமடு வதிவிடப் பொறியியலாளர் அலுவலகக் கட்டட நிர்மாண வேலை | 35,000.00 | M8 அல்லது அதற்கு மேல் |
| NEIAP - II/KOC/SL/02 | இரணைமடு வதிவிடப் பொறியியலாளர் அலுவலகத்தில் மண்ணியல் ஆய்வுகூட அலுவலகக் கட்டட நிர்மாண வேலை | 35,000.00 | M8 அல்லது அதற்கு மேல் |
| NEIAP - II/IRA/JQ/03 | இரணைமடு வதிவிடப் பொறியியலாளர் அலுவல்கத்தில் சிரேஷ்ட அலுவலகர் விடுதிக் கட்டட நிர்மாண வேலை (இரண்டு) | 40,000.00 | M8 அல்லது அதற்கு மேல் |

4. ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களைப் *பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி*யில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். தொ.பே.இல.: 021 - 2283969.
5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 91 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், பிரதித் திட்டப் பணிப்பாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, *பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், வில்சன் வீதி, கிளிநொச்சி* என்ற முகவரிக்கு 17-02-2005 ஆம் திகதி 15.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப படும்.
6. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

எந்திரி அ.கி.வினோதராஜ்,
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரும்,
பிரதித் திட்டப் பணிப்பாளரும் நியாப்,
கிளிநொச்சி.

(சி-40450)(26-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கருணா செய்த துரோகத்தின்

# திகைப்பைப் போக்க உருவானதே வரலாறு தந்த வல்லமை

## கூறுகிறார் தமிழவள்

வலி.வடக்கு,ஜன.17

கருணா என்ற தனிமனிதன் தமிழீழ மண்ணிற்கும் தேசியத் தலைவருக்கும் செய்த துரோகத்தனம் பற்றிய செய்தி கேட்டு, செய்வதறியாது திகைத்தோம். அதனைப் போக்குவதற்காக எமது படையணிப் போராளிகளால் பாடப்பட்ட பாடல்கள் 'வரலாறு தந்த வல்லமை' யாக வெளிவருகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் தமிழவள்.

2 ஆம் லெப். மாலதி படையணியின் உருவாக்கத்தில் இசைவாணர் கண்ணனின் இசையில் உருவான 'வரலாறு தந்த வல்லமை' இறுவட்டு அறிமுக விழா அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் எழுத்தாளர் ஆதிலட்சுமி சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே தமிழவள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,

சிறிலங்கா பேரினவாதத்துடன் இணைந்து கருணா போராட்டத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் செய்த துரோகம் என்பது அனைத்து தமிழர்களையும் தலைகுனிய வைத்துள்ளது.

அந்த 41 நாள்களும் நாம் பட்ட துன்பத்தை எப்படிக் கூறுவது என்று தெரியாது. அந்தநிலைமையைப் பொறுத்தவரை தொண்டைக் குழிக்குள் பாறாங்கல்லை வைத்து அழுத்தியது போன்று இருந்தது.

வெளிவேலை காரணமாகத் திரியும் எங்களுக்கு நாளாந்தம் என்ன நடந்துகொண்டு இருக்கின்றது என்பதை அறியமுடிந்தது. களமுனையில் நிற்கும் போராளிகள் அண்ணா இந்தத் துரோகத்தை முறியடிப்பார், வெற்றிகொள்வார் என்பதில் நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர்.

இதேநேரம், தமது சமநிலை தளம்பாமல் இருப்பதற்கு தலைவன் சம்பந்தமான பாடல்களைக் கேட்டே சமநிலையில் இருந்துள்ளனர். தலைவர் என்றும் தன்னைப் பற்றிய பாடல்கள் பாடுவதையோ அன்றி நூல்கள் வருதையோ விரும்பியவர் அல்லர். ஆனால், மக்களுக்கு நான் கூறியவற்றையும் செய்வதையும் எடுத்துச்சென்று கூறுங்கள் என்றே கூறுவார் - என்றார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பேசும்போது கூறியதாவது:-

சிங்களப் பேரினவாத அரசு எம்மீது வேண்டத்தகாத அநீதியான யுத்தம் ஒன்றை திணிக்க மீண்டும் கங்கணம் கட்டி நிற்கின்றது. சண்டையென்று ஒன்று வருமாக இருந்தால், அதனை நாம் சந்திக்க வேண்டும். அந்த




யுத்தத்தை முறியடிக்க வேண்டியதும் எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

இதற்கு நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்தும் பக்கபலமாகவும் இருக்க வேண்டிய அவசியமானதாகும். இதன் மூலம் தான் நாம் எமது உரிமையையும் விடுதலையையும் தாயகத்தையும் எதிர்கால சந்ததியினருக்குப் பெற்றுக்கொடுக்க முடியும்.

எமது வரலாற்றை எதிர்காலத்தில் தெரிந்து கொள்வதற்கு இத்தகைய பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழைகள், இறுவட்டுக்கள், நூல்கள் என்பன வெளிவர வேண்டியது மிகவும் அவசியமாகும் - என்றார்.

தமிழர் போராட்டக் காலத்தில் பல்வேறுவிதமான வரலாற்றையும் படைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் நடந்துவந்துள்ளார்கள்.

இந்த வகையில் போராளிகளாகிய தாங்கள் போராட்டம் சம்பந்தமாக உருவாக்கிய நூல்கள், ஒலிப்பேழைகள், இறுவட்டுக்களின் வெளியிடுகளும்கூட வரலாற்று நிகழ்வுகளாகவே கொள்ளவேண்டும்.

தமிழர்கள் எக்காலகட்டத்திலும் யுத்தத்தை விரும்பியவர்கள் அல்லர். ஆதரித்தவர்களும் அல்லர். தமிழர்கள் அநியாயமான முறையில் கொல்லப்பட்டும் சொத்துக்கள் அழிக்கப்பட்டும் பெண்கள் பாலியல் வல்லுறவுகளுக்கு உட்படுத்தப்பட்ட நிகழ்வுகளைத் தொடர்ந்து தம்மை சிங்களப் பேரினவாதத்தின் கொடுமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே ஆயுதங்களை ஏந்தியுள்ளார்கள் - என்று அவர் மேலும் கூறினார்.

(ப-5-86)

# வெற்றியையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்ட அதிபர்

'தான் எடுத்த காரியத்தில் எல்லாம் வெற்றியே பெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செயற்பட்டவர் செல்வி செல்லையா. தோல்வி தமக்கு ஏற்படும் என காணப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் என்னென்ன அணுகுமுறைகளை கடைப்பிடிக்கவேண்டுமோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து வெற்றிகளை தேடிக்கொண்டவர் செல்வி செல்லையா".

உடுவில் மகளிர் கல்லூரியில் 22 வருடங்களாக அதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்று செல்லும் செல்வி சி.வி.செல்லையாவுக்கு, கல்லூரி ஆசிரியர், மாணவர்களால் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் உரையாற்றிய வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திருமதி பி.எஸ். ஜெபரட்ணம் தலைமை வகித்தார்.

தென்னிந்தியத் திருச்சபையின் உடுவில் பேராலயத்தில் நடைபெற்ற விசேட ஆராதனைகளில் கலந்துகொண்ட அதிபர் கலாநிதி செல்வி சி.வி.செல்லையாவை, பாடசாலை சமூகத்தினர் அலங்கரிக்கப்பட்ட அன்னப்பட்சி வாகனத்தில் நாதஸ்வர மங்கள வாத்தியத்துடன் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர். செல்விகள் சாம்பவி சிவாஜி, மேனகா நடராஜசுந்தரம் ஆகியோர் வரவேற்புரை வழங்கினர்.

வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் தமது பாராட்டுரையில் மேலும் கூறியதாவது:-

கலாநிதி சி.வி.செல்லையா, மாணவிகளுடைய சீருடை தொடக்கம் ஒவ்வொரு நடவடிக்கையையும் தனது நேரடிக் கண்காணிப்பில் வைத்திருந்தவர். ஏழை மாணவர்களுடைய கல்வி மேம்பாட்டில் கூடிய கவனம் செலுத்தியவர்.



உயர் அந்தஸ்து பெற்ற மாணவிகள்கூட இக்கல்லூரியை நாடிவந்து கல்வி பெற வைத்தவர். வலிகாமம் கல்வி வலயம், செல்வி செல்லையாவின் கல்லூரி நிர்வாக நடவடிக்கைகளால் பெருமை பெற்றுள்ளது. அவரது ஓய்வினை ஓய்வாக நான் கருதவில்லை. ஓய்வில்லாத காலம் இனிமேல்தான் அவருக்கு உண்டு. சமய பணிகளிலும் சமூகப்பணிகளிலும் அவர் தீவிரமாக ஈடுபடும் காலம் இனி மேல்தான் உள்ளது என்று - கூறினார்.


வண.கலாநிதி டி.எஸ்.தியாகராசா உரையாற்றுகையில் -

கல்விப் பணிகளில் செல்வி செல்லையாவின் தன்மை ஆக்கபூர்வமானவையாக அமைந்திருந்தன. சிறுவர்களிடம் கொண்டிருந்த அக்கறை, ஆன்மீகத்தில் கொண்டிருந்த பற்று அவரை என்றும் தலைநிமிர வைத்துள்ளன எனக் கூறினார்.

உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் புதிதாக அதிபர் பதவியேற்கும் திருமதி எஸ்.மில்ஸ், உடுவில் சரித்திரத்தில் நிலைத்து நிற்கும் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் ஓய்வுபெற்றாலும் எதிர்காலத்தில் இக்கல்லூரியின் முன்னேற்றத்துக்கு என்றும் துணையாக இருப்பார் எனக் கூறினார்.

திருமதி ஜீ.பங்கர், கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, திருமதி ஏ.கே.மகேந்திரகுமார் உட்படப் பலர் செல்வி செல்லையாவின் சேவைகளைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்.(ப-152)

# எந்தப் பெரிய சவாலையும் மக்களின் பங்களிப்புடன் வெற்றிகொள்ள முடியும்



எந்தவொரு சவாலையும் எந்தப் பெரிய தடைகளையும் நாம் மக்களுடைய பங்களிப்புடன் வெற்றிகொள்ள முடியும். எமது மக்கள் சமாதானம் வேண்டும் என்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள். இதற்கு எதிராக ஸ்ரீலங்காப் பேரினவாதம் பாரிய இராணுவ தயார்படுத்தலை மேற்கொண்டு வருகின்றது.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் குறிப்பிட்டார்.

87ஆம் ஆண்டு இந்திய இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்த மேஜர் முரளி உட்படப் பத்து மாவீரர்களின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் குனேந்திரன் தலைமையில் உரும்பிராய் - மருதனார்மடம் வீதியில் அமைந்துள்ள பத்து மாவீரர்களினதும் நினைவுக் கற்கள் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன்.

இப்போரட்டத்திற்காக 18 ஆயிரம் போராளிகளையும் 80 ஆயிரம் மக்களையும் நாம் பலிகொடுத்துள்ளோம். எமது இனத்தின் விடுதலையைப் பெறவேண்டும் என்பதற்காக தலைவரினால் மக்களின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் ஆனது விடுதலையை முறியடிக்க முயன்ற உலகில் நான்காவது வல்லரசு என்று கூறப்படுகின்ற இந்தியாவைக் கூட வெற்றிகொள்ள முடிந்தது மக்களின் பங்களிப்பினாலாகும்.

முரளி இங்கிலாந்து தேசத்தில் இருந்து வந்து தலைவருடன் இணைந்துகொண்டவர். இவர் இந்தியாவில் நின்ற காலத்தில் தலைவரினால் வழங்கப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்களையும் கனகச்சிதமாக செய்துமுடித்தவர். தொடர்ந்து தாயகத்திற்கு வந்தும் தனது கடமைகளை மேற்கொண்டதுடன், மக்கள் உள்ளங்களிலும் இடம்பிடித்துக்கொண்டார்.

மேஜர் முரளி உட்படப் பத்துப் போராளிகள் மாவீரர்களாகியது போன்று ஏனைய மாவீரர்களினதும் தியாகம், அர்பணிப்புகளின் அடிப்படையிலேயே இப்போராட்டம் இன்று இராணுவ ரீதியாக பலம்மிக்கதாகவும் ஸ்ரீலங்கா அரசிற்கு சமமாகவும் வளர்ந்து நிற்கின்றது என்று குறிப்பிட்டார்.

மற்றும் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர் சுதன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ப-86)

# எமது உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்திவிட முடியாது

## ஜி.ஜி.கஜேந்திரகுமார் எம்.பி.



தமிழ் மக்களாகிய எங்கள் உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்திவிட முடியாது. எங்கள் உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்க முடியாது. அந்த நிலைமைக்கு நாம் வந்துள்ளோம்.

கைதடிச் சந்தியில் இடம்பெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வு தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் தலைமையில் இடம்பெற்றது. அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் எமது உரிமைக்காக வெளிநாடுகளின் மூலம் எமது பேரினவாத அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இதற்காகவே நாம் இவ்வாறான போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்.


எங்கள் போராட்டம் உண்மையை வெளிக்காட்டக்கூடியதாக அமையவேண்டும். நாம் சமாதானத்தை விரும்புகின்ற மக்கள். எனவே, ஒரு யுத்தம் வெடித்தால் துன்பப்படுகின்ற மக்களாக நாம் இருக்க வேண்டியவர்களாவோம். ஆகவே, நாம் விரும்பி யுத்தத்திற்கு போகவில்லை. எமது உரிமைக்காகவே நாம் போராடுகின்றோம்.

இந்த அரசின் முக்கிய நோக்கம் ஜனாதிபதி முறையை மாற்றியமைப்பது. இன்று நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியின் கையில் தான் உள்ளது.

அந்த நிறைவேற்று அதிகாரங்களை தங்களது கட்சிக்கு ஒரு லாபத்தை கொண்டு வரத்தக்க முறையில் கொண்டு வருவதற்கு அந்த நிறைவேற்று அதிகாரங்களை நாடாளுமன்றம் கொண்டுவர அது முயலுகிறது எனவும் குறிப்பிட்டார். நிகழ்வில் திருமதி பத்மினி சிதம்பரநாதனும் உரை நிகழ்த்தினார். (ப-31)

# கோயில்களில் திருப்பள்ளி எழுச்சி நாளாந்தம் பாடப்படவேண்டும்

## நல்லை ஆதீனமுதல்வர் கருத்து



"ஆலயங்களில் திருப்பள்ளி எழுச்சி பாடல்கள் நாள்ாந்தம் பாடப்பட வேண்டும் திருவெம்பாவைக் காலத்தில் மட்டும் ஓதினால் போதும் ஏனைய நாள்களில் பாடத்தேவையில்லை என கருதுவது தவறு."

தெல்லிப்பழை பால ஞானோதய சபையினரால் வெளியிடப்பட்ட "விநாயகர் திருப்பள்ளி எழுச்சி", "புலியூர்ப் புராணம்" ஆகிய நூல் வெளியீட்டு விழாவில் அருளுரை வழங்கிய நல்லை ஆதினமுதல்வர் சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு கூறினார்.

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலய சிவ கடாட்சக் குருக்கள் இசையரங்கில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நூல் வெளியீடு நடைபெற்றது.

நல்லை ஆதீனமுதல்வர் தனது அருளுரையில் மேலும் கூறியதாவது -

ஆறுமுகநாவலரது கனவுகள் அருகிபோய்க் கொண்டிருக்கும் இன்றைய காலத்தில் புராண வெளியீடுகள் இடம்பெறுவது இன்றுள்ள சமுதாயத்தை சிந்திக்க வைத்துள்ளது. ஒவ்வொரு ஆலயத்திலும் புராணங்கள் படிக்கப்படவேண்டும். அவற்றின் பயன்களை மக்கள் அறிந்து, அதன் ஊடாக வாழ்க்கையை வளம்படுத்தி கொள்ளவேண்டும் என நாவலர் விரும்பினார்- என்றார்

பால் ஞானோதய சபைத் தலைவர் சிவஸ்ரீசி. கணேசலிங்கக்குருக்கள் உரையாற்றுகையில், 1936ஆம் ஆண்டு பன்னாலை வித்துவான் சிவானந்த ஐயரால் இந்த நூல் பாடப்பட்டு இக்காசிலிங்க பிள்ளையார் ஆலயத்தில் அரங்கேற்றப்பட்ட புலியூர்ப்புராணம் என்ற நூல் மிகச் சிதைந்த நிலையில் காணப்பட்டது. அதன் முற்பகுதி வாசிக்கவே முடியாததளவு சேதமுற்றிருந்தது. யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து அப்பகுதியை பிரதிசெய்து நூலை அச்சிட்டேன் மிகுந்த சிரமப்பட்டு ஞானோதய சபையின் 38ஆவது நூலாக இதனை வெளியிட்டுள்ளோம் - என்றார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தமது தலைமையுரையின்போது - பழமை வாய்ந்த இது போன்ற நூல்கள் அருகி அழிந்து போய் விடக்கூடாது என்ற நோக்கில் இதனை குருக்கள் மறுபிரசுரம் செய்துள்ளார்.

தில்லைநடராசரை மையமாக வைத்து கவி வல்லமையாலும் பாடும் சக்தியாலும் பாடப்பட்ட இந்த நூல் காலத்துக்கு பொருத்தமானதும் தரமானதுமாக விளங்குகிறது. ஈழத்து அறிஞர்கள் இங்கிருந்து சிதம்பரத்தை சிந்தித்து கோயிலை பற்றி பாடல்கள் பாடிய வரலாற்றை இந்நூல் மூலம் அறிந்துகொள்ளலாம் - என கூறினார்.

இருநூல்களையும் வெளியிட்டுவைத்து உரையாற்றிய பிரம்மஸ்ரீ ப.கோபலகிருஷ்ண ஐயர் எமது சமயத்துக்கும் பண்பாட்டுக்கும் சமூகத்துக்குமுரிய அரிய நூலாக இது அமைகின்றது. எமது சமய உண்மைகளை புராணங்கள் மூலம் பல மன்னர்களும் அறிஞர்களும் பாடி உள்ளனர். அவற்றை ஆலயங்களில் பாடும் "பௌராணிகர் மரபு" எமது சமயத்தில் தொடர்ந்து வந்துள்ளது. இசையினால் இறைவனை பாடும் மரபினை பௌரணிகர்கள் கொண்டுள்ளனர். பிறமததாக்கங்களில் இருந்து எமது சமயம் காப்பாற்றப்படுவதற்காக பெரியபுராணம், கந்தபுராணம் போன்ற புராணங்கள் தோன்றின. புலியூர் புராணத்தின் சிறப்பு, தன்மை, தல மரபுக்கேற்ப பாடப்பட்டுள்ளது - எனக் கூறினார்.

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், பண்டிதை வை.கணேசபிள்ளை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

சைவப்புலவர் வ.செல்லத்துரை நூல்களின் ஆய்வுரையை வழங்கினார். (ப-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு ஊழியர்கள் மறியலுக்கு முஸ்தீபு

## யுத்தகால நஷ்டஈடு வழங்கப்படவில்லையாம்

தென்மராட்சி,ஜன.17

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு இதுவரை நஷ்டஈடு கிடைக்காத கூட்டுறவு ஊழியர்கள் யாழ். செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் உடைமைகள், சொத்துகள் இழப்புகளுக்கு நஷ்டஈடு கோரி விண்ணப்பித்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை நஷ்டஈடு கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது.

தமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்கக் கோரி உரிய அதிகாரிகளுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டும் இதுவரை நஷ்டஈடு கிடைக்காததால் மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

(4-117)

## பழையமாணவர் சங்க பொதுக் கூட்டம்

தென்மராட்சி, ஜன.17

வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மண்டபதில் சங்கத் தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெறும்.

வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் சி.சிறிபால கிருஷ்ணபிள்ளை அறிவித்துள்ளார். (4-5-117)

## விபத்தில் காயம்

தென்மராட்சி,ஜன.17

வதியின் குறுக்கே ஓடிய சிறுவனைக் காப்பாற்ற சடுதியாக மோட்டார் சைக்கிளை நிறுத்த முயன்றவர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார். மட்டுவில் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சண்முகநாதன் பிரதீபன் (வயது 28) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (4-117)

## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 05 - 06 - 1939

விண்ணில் 30 - 01 - 1993

அமரர் **ஜெகா செந்தில்நாதன்**

(முன்னாள் அரச அதிபர்)

திதி: 17.01.2005

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் அழியாது!

*30, ஓடை ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் வருந்தும்:
தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரன் மற்றும் குடும்பத்தினர்.

(40905)(39-18-24)

## நினைவலைகள்

இருபதாம் ஆண்டு முதலாம் ஆண்டு





**க.வீ.கனகசபாபதி** **க.இராசமணியம்மா**

திதி: அட்டமி 17.01.2005

24.10.1895 → மண்ணுலகில் → 14.09.1909
15.03.1984 → விண்ணுலகில் → 29.01.2004

பாசமுடன் எமைப் பெற்றுப் பாலூட்டிச் சீராட்டி
நேசமொடு சீர்தந்து நிறைந்த கல்வி நிதியும் - தந்து
பார்போற்ற வாழவைத்த பண்புமிகு பெற்றோரே
நீர்நிறைந்த விழிகளுடன் நினைத்திருப்போம் உம் உருவை.

"சிவகிரி", அச்சுவேலி. (40455) (24-18)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### பொன்னையா கனகரத்தினம்



மானிப்பாய், சுதுமலை வடக்கைச் சேர்ந்தவரான பொன்னையா கனகரத்தினம் அவர்கள் (நேற்று) 16.01.2005 ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யோகநாயகியின் அன்புக் கணவரும் விஜயலஷ்சுமி, ஜெயலஷ்சுமி, மகாலஷ்சுமி, சாந்தலஷ்சுமி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் குணரட்ணம், ஆனந்தராஜா, தெய்வேந்திரம், ஜெயராஜா ஆகியோரின் அன்பு மாமனும் பாலச்சந்திரன், குகனேஸ்வரி (ஜேர்மனி), விமலறமணி, செல்வக்குமரன், தயாளினி, தாட்சாயினி, ஜெயானந்தன் - நிறைஞ்சா (லண்டன்), சிவானந்தன் (லண்டன்), பார்த்தீபன் - கேமமாலினி, குகானந்தன் (பிரான்ஸ்), கிருஷ்ணானந்தன், விஜயானந்தன், கோபிநாத் (ஆஸ்திரேலியா), கோகுலநாத் (ஆஸ்திரேலியா), மாதவநாத், ராகுலநாத், குமரநாத், அமேத்திரா, நிரோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் அரவிந்தன், சகானா, டிலோஜனா, திருஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2005) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

(40907)(39-18-24)

தகவல்:
குடும்பத்தினர்.


2005 Mega Intelligent Test
கணினி கற்கைநெறிகளுக்கான
மெகா போட்டிப் பரீட்சை

1. Diploma in Computer Software Engineering — 5 months — DCSE
2. Advanced Diploma in Web Multimedia — ADWM
3. Professional Diploma in e - Developer — PED
4. Diploma in Office Automation with Accounting — DOA
5. Advanced Diploma in Hardware & Networking — ADHN
6. Professional Diploma in Graphic Design — PDGD

ASIAN COMPUTERS வழங்கும்
கணினி கற்கைநெறிகளுக்கான போட்டிப் பரீட்சை
Registered with Ministry of Tertiary & Vocational Education
கல்வி ஆண்டு 2005
வெல்லுங்கள் 75% புலமைப்பரிசில்

இலவச பரீட்சை
23-01-2005
ஞாயிற்றுக்கிழமை



போட்டிப்பரீட்சைக்கான
அனுமதி முற்றிலும்
இலவசம்

யாருக்கு ?
அனைவருக்கும் கணினிக்கல்வி என்ற நோக்கில், வயது வித்தியாசமின்றி கணினித்துறையில் ஆர்வமுடைய அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறலாம்.

பரீட்சைகள் பற்றிய விபரம்
பரீட்சைகள் G. C. E. (O/L) பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு சார்ந்ததாக அமையும். இப்போட்டிப் பரீட்சைகள் அரச பாடசாலைகளில் மட்டுமே நடைபெறும்.

மேலதிக விபரங்கள் - இலவச அனுமதிகள்
இலவச அனுமதிகளையும், விபரங்களையும் யாழ்நகர், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சியில் (கணினியியல் கல்லூரி) அமைந்துள்ள ASIAN கணினி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தற்பொழுது
சாவகச்சேரியிலும்
ASIAN COMPUTERS
தகவல் தொழிநுட்ப
கல்லூரி

ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | சுன்னாகம் | நெல்லியடி | கிளிநொச்சி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, & 021-222 5677 | 108,K.K.S.வீதி, (Jet Motors மேல் மாடியில்) சுன்னாகம். Tel : 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. Tel : 077-3122198 | கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. | கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3035987 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்பாத்துக் கால்களுக்கிடையில் நடந்துவந்த 'பொங்குதமிழ்'

வாழ்க்கை மீதான நம்பிக்கையை விலத்திக்கொண்டு மனங்கள் விரக்தியில் உழன்று கொண்டிருந்த காலம் அது. ஒட்டுமொத்த இடப்பெயர்வுக்குப் பிறகு மீளவும் எங்கள் ஊர்களில் வாழும் பிரயாசையுடன் குடாநாட்டைக் கொஞ்சங்கொஞ்சமாய் நிறைக்கத் தொடங்கியிருந்தோம்.

அப்போதெல்லாம் அடையாள அட்டையில் பெறுமதியற்ற நம்பிக்கையொன்றைக் கொண்டிருந்தது மனம். "தொடர்ந்து வாழ்தல்" பற்றிய பயும் எல்லோரையும் கவ்விக்கொள்ள அடிக்கடி சந்திகளில் இறங்கி அடையாளம் காட்டி எங்கள் வாழ்தலை உறுதிப்படுத்திக் கொண்டு நடந்தோம்.

வெறியர்களால் சிதைக்கப்பட்டுப் போயிருந்த எங்கள் கிராமத்து வீதிகளில் விளையாடித் திரிந்த பிள்ளைகள் கைதுசெய்யப்பட்டார்கள். பின்வந்த காலத்தில் எல்லாமே அர்த்தமற்றுப் போகுமாறு செம்மணியில் அவர்கள் உயிரோடு புதைக்கப்பட்ட உண்மை நெஞ்சில் இடியென்றே உறைத்தது.

'சோமவன்ச ராஜபக்ஷ' என்ற சிங்களச் சிப்பாய் தன் உயிரைப் பிடித்துக்கொள்ளும் அவசரத்தில் கைதவறவிட்ட உண்மை அது.

எல்லாச் சனங்களும் உயிரைக் கையில் ஏந்தியபடி மறைந்தே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். சண்டைகளில் கூட சனங்கள் பணயம் வைக்கப்பட்டபோதுதான் தமிழ்ச் சமூகம் தன் அபிலாசைகளை உலகுக்குச் சொல்ல வேண்டிய கட்டாயத்தை எதிர்கொண்டது.

சமாதானத்துக்கான முயற்சிகளில் சர்வதேசமும் பங்கெடுக்கவேண்டும் என்ற தேவையை உணர்த்தத் தலைப்பட்டது. அடக்குமுறைகளுக்குள் சிக்கிப்போயிருந்த மக்கள் தமது அபிலாசைகளைச் சொல்ல அவாக் கொண்டு எழுந்தனர்.

**நான்காவது பொங்குதமிழ் நிகழ்வு இன்று**

இதன் விளைவாக யாழ். மாவட்டத்தில் அப்போதிருந்த 47 மனித நேய அமைப்புகளும் யாழ். பல்கலைக்கழக சமூகத்துடன் இணைந்து 'பொங்குதமிழ்' என்ற எழுச்சி நிகழ்வொன்றை ஒழுங்குபடுத்தினர்.

இதை அறிந்தபோது இராணுவ இயந்திரம் அடாவடித்தனங்களை அதிகரிக்கத் தொடங்கியது. சிங்கள நண்பர்களுக்காகச் சிங்கத்திலான சுவரொட்டிகள்கூட ஒட்டப்பட்டிருந்தன.

சுவரொட்டி ஒட்டச் சென்ற 20இற்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் கைதாகி விசாரணை என்ற பெயரில் சித்திரவதைகளுக்குள்ளாகினர்.

'பொங்குதமிழ்' நிகழ்வில் கலந்துகொள்ளக் கூடாது என்று உயிராபத்தைச் சுட்டிக்காட்டி அச்சுறுத்தும் பாணியிலான துண்டுப்பிரசுரத்தை இராணுவம் வெளியிட்டு மக்களைத் தடுக்க முயன்றது.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சுற்றிப் பெருமளவு பொலீஸார் குவிக்கப்பட்டுச் சோதனைகள் தொடர்ந்தன. பல்கலை மாணவர் மட்டுமே வளாகத்துள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த ஏற்பாட்டாளர்கள் உரிய நேரத்தில் ஆலய மணிகளை ஒலித்தும் வீட்டிலிருந்தவாறு அபிலாசைகளை வலியுறுத்துமாறு மக்களிடம் கேட்டனர்.

ஆனாலும் மக்கள் மேலும் வலுப்பெற்றனர். உள்ளுணர்வு கொழுந்துவிட்டெரிய பொங்குதமிழில் கலந்துகொள்வதென இறுமாப்புக் கொண்டிருந்தனர். அசாத்தியத் துணிச்சலுடன் இராணுவ கவச வாகனங்களின் கடும் சோதனைகளுககு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு பள்ளி மாணவர்கள், சமயப் பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் குவிந்தனர்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் மட்டுமன்றி, வவுனியா பல்கலைக்கழக வளாகத்திலும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் அன்றைய தினமே பொங்குதமிழ் நிகழ்வு கொண்டாடப்பட்டது.



2ஆவது பொங்குதமிழில் அலையெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதி (17-04-2002).

அதுமட்டுமன்றி, மெல்போன, சிட்னி ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சுமார் 400 ஈழத்தமிழ் மாணவர்கள் ஆஸ்திரேலிய நாடாளுமன்றின் முன்பாகப் 'பொங்குதமிழ்' பிரகடனத்தை வலியுறுத்திக் குரலெழுப்பினர்.


அங்குள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பும் 250 இற்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் கூடி தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தினர். மக்களின் பாதுகாப்புக்கென்று கூறிக்கொண்டு யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த 40 ஆயிரத்துக்கும் அதிகமான படையினரின் சப்பாத்துக் கால்களுககுள் இருந்து எம்மை விடுவித்துக்கொள்வதற்காய் ஓங்கி ஒலித்தது தமிழ்க்குரல்.

அரசின் வாலாட்டிகள்கூட இந்நிகழ்வுக்கு அரசியல் சாயம் பூசமுடியாது திகைத்தனர். தெளிவுகொண்டது உலகம் தமிழர்களின் மனிதம் சார்ந்த கோரிக்கைகள் தட்டிக்கழிக்கப்பட முடியாதவையாக உலகின் முன்வைக்கப்பட்டன.

17.01.2001 எமது போராட்ட வரலாற்றுக்கு மேலும் ஒரு அடைவினை ஏற்படுத்திக்கொடுத்தது. இத்தனை உயிர்களை விலைகொடுத்து நாம் செய்துவரும் தார்மீகப் போராட்டத்துக்கான வலிமையை உணர்த்தமுடிந்தது.

முதலாவது பொங்குதமிழ் நிகழ்வு அன்றைய சூழ்நிலைகளில் எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் அதிகமாயினும் சாதித்த வெற்றிகளும் அதிகமாகவே இருக்கின்றன.

**சிவசைலஜா**
**நல்லூர்.**



முதலாவது பொங்குதமிழ் நிகழ்வில் இராணுவ அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள்.



முதலாவது பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்ளச்சென்ற சமயப்பிரமுகர்களையும், பொதுமக்களையும் இராணுவத்தினர் தடுக்கின்றனர். (17-01-2001)

# சுனாமி பற்றி எச்சரிக்கத் தவறிய தரப்புகள் மீது சட்ட நடவடிக்கை

## விசாரித்து அறிக்கைதர ஜனாதிபதி ஆணைக்குழு

கொழும்பு.ஜன.17

இயற்கைப் பேரனர்த்தம் ஒன்று நிகழப் போவதை ஓரளவேனும் அறிந்துகொண்டு முன் கூட்டியே தகவல்தரத் தவறியவர்கள் மீது நட வடிக்கை எடுப்பது தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கின்றது.

இதுதொடர்பாக ஜனாதிபதியின் அரசமைப்பு விவகார ஆலோசகரும், தேசியப்பட்டியல் எம்.பியுமான விஜயதாஸ ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை ஏற்று ஆணைக்குழுவை நியமிக்க ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஜனாதிபதியிடம் ராஜபக்ஷ சமர்ப்பித்த மனுவில் தெரிவித்திருப்பதாவது:-

கால. நிலை தொடர்பான சரியான தகவல்களை மக்களுக்கு வழங்கும் பொறுப்பு வளிமண்டலத் திணைக்களம், இலங்கைப் புவியியல்-ஆய்வு மையம், கடற்படை ஆகிய முத்தரப்புகளிடமும் உள்ளது.

சுனாமி பேரனர்த்தம் தொடர்பாக முன் கூட்டியே தகவல் வெளியிடுவதில் தவறுகள், கவலையீனங்கள் இடம்பெற்றிருக்க சாத்தியங்கள் உள்ளன.

எனவே. இந்த அனர்த்தம் தொடர்பாக முன்கூட்டியே மக்களை எச்சரிக்கும் தகவல்களை வழங்கியிருக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்தவர்களை இனங்கண்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வசதியாக விசாரணைகளை நடத்த ஆணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டும் - என்று கேட்டுள்ளார்.

இதேவேளை -

அனர்த்தம் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

# நலன்புரி நிலையங்களுக்கு முழு நேரமும் குடிதண்ணீர்

வடமராட்சி,ஜன.17

வடமராட்சிக் கரையோரத்திலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கும், கரையோரப் பகுதியில் மீள் குடியேறிவரும் மக்களுக்கு முழுநேரமும் குடிதண்ணீர் விநியோகம் நடைபெற்றுவருகிறது.

கெயர் நிறுவனத்தின் இரண்டு பவுஸர்கள், பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் ஒரு பவுஸர் மற்றும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகள், பருத்தித்துறைப் பிரதேச சபை, வலி.கிழக்குப் பிரதேச சபை என்பனவற்றின் பவுஸர்கள் மூலம் தினமும் காலை முதல் மாலைவரை குடிதண்ணீர் விநியோகம் நடைபெற்றுவருகின்றது.

யாழ். மாநகர சபை, வலி. தென்மேற்கு, வலி. வடக்குப் பிரதேச சபைகளின் பவுஸர்களும் கடந்த காலத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டுவிட்டு தற்போது அந்தந்தச் சாலைகளுக்குத் திரும்பிச்சென்றுவிட்டன.

கரையோரப் பகுதிகளில் உள்ள கிணறுகள் குளோரீன் இட்டுச் சுத்தம் செய்யப்பட்ட போதிலும் நீர் குடிக்கக் கூடியதான தன்மை இன்னமும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப் படுகிறது. (4-173)

# காரைநகர் எழுச்சிப்பேரவை ஒரு லட்சம் நிதி உதவி

கொழும்புத்துறை,ஜன.17

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையால் முன்னெடுக்கப்பட்டுவரும் சுனாமி அனர்த்த துயர் துடைப்பு நிதியத்துக்குக் காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் ஒரு லட்சம் ரூபாவைக் கையளித்துள்ளனர்.

காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சிற்சபேசன் இந்நிதியை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சூ.சிறிலிடம் கையளித்தார்.

அதேவேளை -

தென்மராட்சி பிரதேச எழுச்சிப் பேரவையினர் 82 ஆயிரம் ரூபாவையும் -

நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவையினர் 70 ஆயிரம் ரூபாவையும் வங்கி நிதியத்தில் வைப்பிலிட்டுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மக்களும் இந்நிதிக்குத் தமது பங்களிப்பை வழங்கிவருகின்றனர். இதுவரை சுமார் 17 லட்சம் ரூபா நிதி கிடைத்துள்ளது.

தொடர்ந்து பங்களிக்க விரும்புவோர் மக்கள் வங்கி பிரதான வீதி கிளைக் கணக்கு இலக்கம் 107 - 012026, நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கிக் கணக்கு இலக்கம் 11719 என்பவற்றில் வைப்பிலிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய், தந்தையரை இழந்த சிறுவர்களுக்கு உதவி

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது தாய், தந்தையரை இழந்து அநாதரவாகப் பரிதவிக்கும் சிறுவர்களுக்கு உதவுவதற்காகப் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்கள் தமது ஒருநாள் வேதனத்தை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சுகாதாரசேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவது தொடர்பாக விடுத்திருந்த சுற்றுநிருபத்திற்கு அமைவாகவே அவர்கள் தமது ஒருநாள் ஊதியத்தை வழங்க முன்வந்துள்ளனர். (4-5-203-135)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 645 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 14-1-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5184766 - 5197916 |

வெற்றி இலக்கங்கள்: 11 22 28 45

லக்கினம்: கன்னி

ஜக்பொட் பரிசு ரூபா.17,04,200/- வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 23,56,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,91,941 | 10/- | 29,19,410/- |
| 2.இலக்கங்கள் | 26,772 | 20/- | 5,35,440/- |
| 1.இல + லக்கினம் | 26,470 | 30/- | 7,94,100/- |
| 2.இல + லக்கினம் | 2,460 | 100/- | 2,46,000/- |
| 3.இலக்கங்கள் | 712 | 500/- | 3,56,000/- |
| 3.இல + லக்கினம் | 62 | 5,000/- | 3,10,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 17,04,200/- | - |
| மொத்தம் | 3,48,426 | - | 67,61,450/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 67,61,450/-

தொடர் இல. 4226910 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5196970-4-93
5188949-0-80
5197821-0-95
5190519-6-34
5190174-3-93


## ஓய்வூதியக் கோவைகள் தனிச் சிங்களத்தில்

ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து ஓய்வூதியம் பெறுபவர்களின் கோவைகள் தனிச்சிங்கள மொழியில் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

இதனால் உத்தியோகத்தர்கள் விரைவாக ஓய்வூதியத்தை வழங்க முடியாமல் திண்டாடுகின்றனர். ஓய்வூதியர்கள் பிரதேச செயலகங்களுக்கு அலைந்து திரிகின்றனர்.

கொழும்பிலுள்ள ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து தமிழ், ஆங்கிலம் மொழி பெயர்ப்பின்றி ஓய்வூதியம் பெறுபவர்களின் கோவைகள் தனிச் சிங்கள மொழியிலேயே தொடர்ச்சியாகப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் சிங்கள மொழியில் தேர்ச்சிபெற்ற அலுவலகர்கள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றியதனால் விரைவாக ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

அநேகமான பிரதேச செயலகங்களில் சிங்கள மொழியில் தேர்ச்சிபெற்ற அலுவலகர்கள் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து ஓய்வூதியர்கள் உரிய காலத்தில் ஓய்வூதியத்தைப் பெறமுடியாமல் அலைந்து திரிகின்றனர். இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(4-175)


### ஒத்துமாறல்

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் நிர்வாகத்துறையில் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர், யாழ்ப்பாணம் அல்லது வலிகாம வலயத்தில் நிர்வாகத்துறையில் தெரிவுசெய்யப்பட்ட ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: T.P. 021 - 222 7837
0776118861.
(40903)

### 2005 இல் ஆங்கிலமா?

ஆரம்பம்: 21-01-2005
8 a.m./4p.m

O/L, A/L Computer
ENG./BASIC/SPOKEN/
ENG.LITERATURE, UNIVERSITY
ENG. (ESL) -

ஆசிரியர்: A.V. மகாதேவன் B.A,
(Special English Trained)
Diploma In Edu. & Diploma In ENGLISH
"வைகுந்தம்" வழக்கம்பரை,
சுழிபுரம்.
(40859)


## நெடுந்தீவுக் கோட்டத்துக்கு 11 பட்டதாரிகள்

நெடுந்தீவு, ஜன.17

நெடுந்தீவுக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கென பதினொரு பட்டதாரிப் பயிலுநனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு ஆறு பட்டதாரிப் பயிலுநர்களும், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரிக்கு இரண்டு பேரும், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு மூன்று பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 10பேர் கடந்த 13ஆம் திகதி தொடக்கம் தத்தமது பாடசாலைகளில் கடமைகளைப் பெறுப்பேற்றுள்ளனர். (4-112)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3090177 இலிருந்து 3105963 வரை

சீட்டிழுப்பு இல. 1573
திகதி 15.01.2005

வெற்றி எண்கள்: 07 10 23 34 35
போனஸ் எண்: 13

ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 19,81,950/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 95 | 10,000/- | 9,50,000/- |
| 3 | 4,878 | 500/- | 24,39,000/- |
| 2 | 81,038 | 20/- | 16,20,760/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த இலக்கம் 07 (போனஸ் எண் தவிர்ந்து) | 99,144 | 10/- | 9,91,440/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் Rs. 27,49,700/-
வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.66,01,200/-

தொடர் இல. 200000000 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 19 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3104208-2-43
3105768-3-75
3091426-2-39
3105695-0-40
3101539-8-44



SHARP
be sharp

SHARP SF-1118
அச்சுப் பிரதி இயந்திரம்

அதி சிறப்புடன் அமைந்த செயற்பாடு...




SHARP SF-1118 பிரதி இயந்திரம் முன்னணி மிக்க SHARP தொழினுட்பத்துடனும், நீங்கள் எதிர் பார்க்கும் அதி சிறந்த செயற்பாட்டுடனும் உங்களிடத்திற்கு வருகிறது.

- நிமிடத்திற்கு 18 பிரதிகள்
- இரண்டு வழிகளில் தாள் செலுத்தும் வசதி
- பயன்படுத்தக்கூடிய தாளின் அளவுகள் A3-A5
- உண்மையான பத்திரத்தை போன்ற பிரதி

BROWNS GROUP BG ESTD 1875

ஏக முகவர்
அலுவலக இயந்திரங்கள்
பிரவுன் அன்ட் கம்பனி லிமிட்டெட்

உடனடி அழைப்புகளுக்கு: டிலோரன்ஸ்-0777-570205

யாழ்ப்பாண கிளை :இல.89,ஸ்டான்லி வீதி,யாழ்ப்பாணம். தொ:பேசி : 021-2225150 மட்டக்களப்பு கிளை :இல.42/1 திருகோணமலை வீதி,மட்டக்களப்பு. தொ:பேசி : 065-2226385

வவுனியா கிளை :இல.8 முதலாம் குறுக்குத்தெரு,வவுனியா. தொ:பேசி : 024-2220081 அம்பாறை கிளை :பிரவுன்ஸ் சந்தி, அம்பாறை தொ:பேசி : 063-2224633

Tradlanka Advertising


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமியால் பாதிப்புற்றோருக்கு

# தெற்கிலும் வடக்கிலும் சமகாலத்தில் அரச வீடமைப்புகள் நிறுவவேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழு வற்புறுத்து

யாழ்ப்பாணம், ஜன.17

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள தெற்கு மக்களுக்கு வீடமைக்கும் திட்டம் ஆரம்பிக்கும் சமகாலத்தில் வடக்கிலும் ஆரம்பிக்கவேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் கோரியுள்ளது.

ஆணைக்குழுவின் தலைமையகத்தில் இயங்கும் சுனாமி அனர்த்தப் பணிக் கண் காணிப்புக்குழுவிடமே இக்கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் தெற்கு மக்களுக்கு வீடமைக்கும் பணி ஆரம்பிக்கும்போது வடக்கு -கிழக்கு புறக்கணிக்கப்படுகின்றது எனச் செய்திகள் வெளியானதை அடுத்தே இந்தக் கோரிக்கை அடங்கிய அவசர கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத் தால் இலங்கையின் வடமராட்சிப் பகுதி உட் பட அனைத்துப் பகுதியிலும் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரிமுகாம் களில் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தி யில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்துவ தற்கான அரச வீடமைப்புத் திட்டத்தை அரசு தென்பகுதியில் மட்டும் ஆரம்பித்துள்ளது.

இதுதொடர்பாக, வடபகுதி மக்களால் எமது அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

அதுமட்டுமல்லாது வடபகுதி நலன்புரி முகாம்களுக்கு விஜயம் செய்த எமது குழு, அங்கு மக்கள் படும் துன்பங்களை நேரில் அவதானித்துள்ளது. அவர்கள் குறைதீர அரச வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடமைத்துக் கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

இதுதொடர்பாக நிலைமைகளை ஆராய்ந்து தென்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச வீடமைப்புத் திட்டத்திற்கான வடபகுதி மக் களின் நன்மை கருதி உடனடியாக ஆரம்பிப் பதற்கு சுனாமி அனர்த்தக் கண்காணிப்புக் குழு என்ற வகையில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்-என்றுள்ளது. (3-5)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.17

பருத்தித்துறை மாவட்ட சாரணர் தலைவர் கள், குருளைச்சாரணர் தலைவர்கள் ஆகியோ ருக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேலாயு தம் மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள் ளது.

அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த் தத்தால் பாதிக்கப்பட்ட சாரணர்கள், சாரணத் தலைவர்கள் தமது விவரங்களுடன் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள் ளுமாறு மாவட்ட சாரணர் ஆணையாளர் கேட்டுள்ளார். (4-5-173)

# தும்பளை கிழக்கில் வீடமைக்க சனசமூக நிலையம் நிதியுதவி!

வடமராட்சி,ஜன.17

தும்பளை கிழக்குப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு, வீடுகளை மீள அமைப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்கத் தும்பளை கிழக்கு சன சமூக நிலையம் முடிவு செய்துள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தும்பளை கிராமத்தைச் சேர்ந்தவர்களின் நிதி உதவியை யும் சனசமூக நிலையத்தின் நிதி உதவியை யும் கொண்டு இந்த உதவிகள் வழங்கப்பட் டுள்ளன.

வீடுகளை மீள அமைப்பதற்கான உதவி கள் தொடர்பாகத் திட்ட மதிப்பீடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாக சனசமூக நிலை யத்தின் செயலாளர் கா. புஸ்பராசா தெரிவித் தார். (4-173)

# சமையல் பாத்திரங்கள் அன்பளிப்பு

வடமராட்சி,ஜன.17

வடமராட்சி கிழக்கில் கடல் கொந்தளிப்பி னால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 'கெயர்' நிவனம் சமையல் பாத்திரங்கள், அரிக்கன் லாம்பு ஆகியவற்றினை வழங்கிவருகின்றது.

செம்பியன்பற்று, மருதங்கேணி, உடுத் துறை, ஆழியவளை, கட்டைக்காடு ஆகிய நலன்புரி நிலையங்களில் உள்ள குடும்பங்கள் தமது அன்றாட வாழ்க்கையினை ஆரம்பிக்கும் வகையில் இப்பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (4-182)

சுனாமி அனர்த்தத்தால்

# மீன்பிடி உபகரணங்களில் 80சதவீதமானவை நாசம்!

## ஐ.நாவின் பிந்திய அறிக்கை தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.17

'சுனாமி' பேரனர்த்தத்தினால் இலங்கை யில் மீன்பிடித்துறையின் உபகரணங்களில் 80 வீதமானவை முற்றாக அழிந்துவிட்டன. இத னால், மீன்பிடித்துறையில் பாரிய வீழ்ச்சி ஏற் பட்டுள்ளது.

- இவ்வாறு ஐ.நா.சபையின் இலங்கைக் கிளைக்கான தலைவி மைகுல் போர்ன்மியோ தகவல் வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஐ.நா.சபையின் ஆகப் பிந்திய இந்த அறிக்கையின்படி இலங் கையின் மீன்பிடித் துறையின் 18 ஆயிரத்து 500 படகுகள் அழிந்துள்ளன. 7 ஆயிரத்து 500 மீனவர்கள் இறந்து போயுள்ளனர். 5 ஆயிரத்து 600 மீனவர்கள் காணாமற்போயுள்ளனர்.

இவை தவிர, ஐஸ் உற்பத்தி நிலையங் கள், களஞ்சியங்கள், துறைமுகங்கள், சந்தை கள் என்பனவும் அழிந்துபோயுள்ளன என அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

ஐ.நா.சபையின் இலங்கைக்கான கிளைத் தலைவி கருத்துத் தெரிவிக்கையில்:-

பாதிப்படைந்துள்ள மின்பிடிப் படகுகளைத் திருத்தவும், புதிதாகப் படகுகளைப் பெற்றுக் கொடுக்கவும் திட்டமொன்றை ஐ.நா.சபை உருவாக்கி அந்தத் திட்டத்தின்கீழ் உதவி செய்யவுள்ளது எனத் தெரிவித்தார். (3-202)

# கிராம அலுவலர் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டும்

## பதில் கடமை மூலம் பணிகளை நிறைவேற்றமுடியாது

யாழ்.மாவட்டத்தில் கிராம சேவையாளர்க ளது வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப் படவில்லை. இதனால், பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள் ளதாகப் பிரதேச செலாளர்கள் யாழ். மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள் ளனர்.

கிராம சேவையாளர்கள் பலரது வெற்றி டங்கள் தொடர்ந்தும் நீண்டகாலமாக நிரப்பப்ப டாத நிலையில் உள்ளன. வெற்றிடம் உள்ள இடங்களுக்குப் பதில் கிராம அலுவலர்களை நியமிக்க வேண்டியுள்ளது.

பதில் கிராம அலுவலர்களாக நியமனம் பெற்றவர்கள் அர்ப்பணிப்புச் சிந்தனையுடன் செயலாற்றுவதில்லை என்று கவலை தெரி விக்கப்படுகிறது.

இந்த ஆண்டு (2005) அவசரகால புனர மைப்பு புனர்நிர்மாண ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. துரித கதியில் கிராமிய மட்ட வேலைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின், கிராம அலுவலர்கள் உடனடி யாக நியமனம் செய்யப்படவேண்டும் எனப் பிர தேச செயலாளர்களும் உதவி அரச அதிபர்க ளும் யாழ்.அரச அதிபரைக் கேட்டுள்ளனர். (ஐ-185)

# ஐந்து கல்வி வலயங்களில் 130 பட்டதாரிகள் நிர்வாகத்துறைக்கு

யாழ்.மாவட்டத்தில் கல்வி நிர்வாகத்துறை யில் 130 பட்டதாரி பயிலுநர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

நியமனம் பெற்ற பட்டதாரி பயிலுநர்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம் தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய ஐந்து கல்வி வலயங்களுக்கும் நியமனம் பெற்றுள்ளனர்.

இதேவேளை, கல்வி வலயங்களில் கல்வி நிர்வாகப் பிரிவுக்கு நியமனம் பெற்ற பட்ட தாரிப் பயிலுநர்களுக்கு எவ்வித பதவிகளும் (Designation) இன்னமும் வழங்கப்படவில்லை என்று நியமனம் பெற்ற பட்டதாரிகள் கவலை தெரிவித்தனர். (ஐ-185)

# பாடசாலைகளுக்கு ரீடோ ஆய்வுகூட வசதிகள் வழங்கும்

விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் தேவைப் படும் பாடசாலைகளுக்கு அவற்றைச் செய்து கொடுப்பதற்கு 'ரீடோ' நிறுவனம் முன்வந் துள்ளது.

விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் தேவைப்ப டும் பாடசாலைகள் தம்மோடு தொடர்புகொள்ளு மாறும் அவர்களுக்கு நடமாடும் ஆய்வுகூட வசதி கள் செய்து தரப்படும் எனவும் 'ரீடோ' நிறு வன இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தெரிவித் துள்ளார்.

இந்த நிறுவனம் இவ்வாண்டுக்குரிய கல்வி அபிவிருத்தி தொடர்பான திட்டத்தின் செயற் பாடுகளை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம் பிக்கவுள்ளது.

அத்துடன், கல்வி அபிவிருத்தி தொடர்பான திட்டத்தின் கீழ் கணிதம், விஞ்ஞானம், ஆங்கி லம் போன்ற பாடங்களில் அடைவுமட்டம் குறைந்து வினைத்திறன் இன்றிக்காணப்படும் மாண வர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடத்த வும் கல்விசார் கருத்தரங்குகளை நடத்தவும் 'ரீடோ' நிறுவனம் முன்வந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-203-152)

# சுனாமியால் ஊடகவியலாளர்கள் இருவரைக் காணவில்லை; 25 பேர்காயம்!

சுனாமி கடல் அனர்த்தத்தினால் தெற் கிலும் கிழக்கிலும் ஊடகவியலாளர்களில் இரண்டு பேர் காணாமற்போயுள்ளனர்; 23 பேர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை சூழல் பாதுகாப்பு ஊடகவியலா ளர் போரம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் விவரங்களைச் சேகரித்த இந்த அமைப்பு, அவர்களின் சேதங்கள் தொடா பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் காரணமாக 121 ஊடக வியலாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த ஆயி ரம் பேர் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங் களிலும் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு 2 கோடி 10 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது எனப் போரம் மதிப்பீடு செய்துள்ளது.

அவர்களின் 48 வீடுகள் அழிவடைந்துள்ளன. வீடுகளில் இருந்த 53 கமராக்கள், 7 வீடியோ கமராக்கள், 3 'பக்ஸ்' இயந்திரங்கள், 16 ஒலிப் பதிவுக் கருவிகள், 11 மோட்டார் சைக்கிள்கள், 3 சைக்கிள்கள், 5 கையடக்கத் தொலைபேசி கள் ஆகியன உட்பட அவர்களது உடைமை களும் கடலால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன.

இதனால், தமது செய்திப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர் என்றும் -

எனவே, இவர்களுக்கு மனிதாபிமான ரீதி யில் உதவிகளை வழங்கி மீளத் தமது பணியை அவர்கள் மேற்கொள்ள சர்வதேச ஊடகவி யலாளர்கள் முன்வரவேண்டும் என்றும் போரத் தின் இணைப்பாளர் தருமன் விக்கிரமரத்தின தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் '7B அல்பேட், பெரேரா மாவத்தை, நுகேகொட' என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு [illegible] எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-203)

# வறுமைக் கோட்டின்கீழ் வாழும் நெடுந்தீவு மக்களுக்கு உதவி

## கியூடெக் நிறுவனம் வழங்கியது

நெடுந்தீவுப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களினதும் அங்கு வறு மைக்கோட்டின் கீழ் வாழும் மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான உத விச் செயற்றிட்டத்தினை யாழ்.மனித முன் னேற்ற நடுநிலையமும் (கியூடெக்) ஹரித்தாஸ நிறுவனமும் மேற்கொண்டுள்ளன.

இடம்பெயர்ந்த மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் பல லட்சம் ரூபா பெறுமதி யான பொருள்களை சுயதொழில் முயற்சிக் கென இந்த நிறுவனங்கள் வழங்கியுள்ளன.

இதில் [illegible]தொழிலாளருக்குரிய உபகர ணங்கள், தச்சுத் தொழிலாளருக்குரிய உபகர ணங்கள், சைக்கிள் திருத்துநர்களுக்கான உப கரணங்கள் மற்றும் கட்டடத் தொழிலாளர் களுக்கான உபகரணப் பொருள்கள் என்பன அடங்குகின்றன.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஒரே தடவையில் இவ்வாறான பாரிய உதவித் திட்டம் ஒன்றை, அதாவது, மக்களின் சுயதொழில் முயற்சிக்கான 35 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை முதன் முதலில் இவ்விரு நிறுவனங்களும் இணைந்து வழங்குகின்றமை குறிப்பிடத்தக் கது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் நெடுந் தீவுப் பங்குத் தந்தை அருட்திரு. எஸ்.செப நேசரட்ணம் அடிகளார் மேற்கொண்டார் என் பதும் குறிப்பிடத்தக்கது. (4-112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள தஞ்சாவூர் வீணையும் Australia தயாரிப்பில் உள்ள கையில் எடுத்துச்செல்லும் ஆங்கில தட்டச்சு இயந்திரமும் (Computer Type - மின்சாரத்தில் இயங்குவது) விற்பனைக்குண்டு. தொடர்பு: சு.தர்மலிங்கம், இளைப்பாறிய அஞ்சல் அதிபர், பொற்பதி வீதி, கோண்டாவில். (40863)

## காணி விற்பனைக்கு

நவக்கிரி, அச்சுவேலி வீதியில் நவக்கிரிச் சந்திக்கு அருகில் 16 பரப்பு (கிணற்றுடன் கூடிய) தோட்டக்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவும் உகந்தது. தொடர்பு: ராசா, அற்ஷையா கொமினிக்கேஷன், புத்தூர் வீதி, நவக்கிரி. (40871)

## வீடு விற்பனைக்கு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கேணியடி வைரவர் கோயிலுக்கு அருகிலுள்ள காணியில் சிறு திருத்தவேலைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல.19, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (தரகர் தேவையில்லை). (40914)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான, நம்பர் -1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 19-01-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: ராஜீவ்- ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை கால்நடைத் தீவன விற்பனை நிலையம் - முதலாம் கட்டை, பருத்தித்துறை, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ரஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட், யாழ். T.P.: 222 2807; 222 3529. (40866)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அனுஷம் நட்சத்திரம், உதயத்தில் செவ்வாய், 31 வயதுடைய, M.B.B.S. டாக்டருக்குத் தகுதியான Professional மணமகனை உள்நாட்டில் / வெளிநாட்டில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முழுவிவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.: 2474, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (40853)

## மணமகள் தேவை

1974ஆம் ஆண்டு, எலக்ரோனிக்கல் எலக்ரிக்கல் லண்டன் எஞ்சினியருக்கும் (படித்த பட்டதாரி), 1961ஆம் ஆண்டு, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கும் படித்த மணமகள் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 286, நாவலர் வீதி, யாழ். (40915)

## தவறிவிட்டது

S.ஸ்ரீசாரங்கசர்மா என்பவரது தேசிய அடையாள அட்டையும் (இல.821022533V), விசேட அடையாள அட்டையும், சாரதி அனுமதிப் பத்திரமும், GIM அட்டையும், CAT CARD (COMMERCIAL BANK) அடங்கிய பேர்ஸ் மனோகரா திரையரங்கில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: 105/3, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(40877)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த முதலித்தம்பி வரதராசன் என்பவருடைய வாகன சாரதி அனுமதிப்பத்திரம் கறுப்பு நிறப் பேர்ஸுடன் கந்தர்மடத்துக்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் 15.01.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மு.வரதராசன் சேர்விஸ் ஸ்ரேசன், புன்னாலைக்கட்டுவன் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(40886)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கும், 2 வயதுடைய குழந்தையைப் பராமரிப்பதற்கும் பணிப்பெண் தேவை. சகல வசதிகளும் அளிக்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 35-50 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தொடர்பு: க.உமாசங்கர் (விரிவுரையாளர்), இல.55, கல்லூரி ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (40964)

## கும்பாபிஷேக நிகழ்வுகள்

சாவகச்சேரி,ஜன.17

சாவகச்சேரி, கல்வயல் அருள்மிகு வேதவனம் ஸ்ரீ விநாயகர் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக விழா எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (4-31)

★ ★ ★

சாகவச்சேரி,ஜன.17

நுணாவில் மத்தி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு 26ஆம் திகதி புதன்கிழமை காலைமுதல் பிற்பகல் வரை நடைபெறவுள்ளது.

இந்த ஆலயம் கடந்த 2000ஆம் ஆண்டு தென்மராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-31)

## புனரமைப்புப் பணியில் பாஷையூர் இளைஞர்கள்

யாழ்ப்பாணம்,ஜன.17

'சுனாமி' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, முனை, தும்பளைப் பகுதிகளில் பாஷையூர் இளைஞர் குழுவினர் யாழ். மாணவர் அமைப்பினருடன் இணைந்து புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டனர். (4-190)

## தேவை

எம்.இராஜநாயகம் அன்கோ பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்திற்கு உதவிக் கணக்காளர்கள், கணக்காய்வுப் பயிலுநர்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

(T.P., இலக்கத்துடன்)

140, பலாலி வீதி, திருநெல்வேலி.

(40917) **T.P.: 222 2478** (24-18-45)

## கொக்குவில் கிழக்கு காளி அம்பாள் ஆலய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 7321 |
| இரண்டாம் பரிசு | 4657 |
| மூன்றாம் பரிசு | 2196 |

ஆறுதல் பரிசுகள்:

2082, 3343, 7122, 4959, 553.

மா. றதீஸ்குமார்,
செயலாளர்.

☞ நேற்றைய 16-01-2005 உதயனில் வெளியான இந்த விளம்பரத்தில் பரிசில்களுக்குரிய இலக்கங்களில் ஏற்பட்ட தவறுக்கு வருந்துகின்றோம். (40904)

## கண்ணீர்த்துளிகள்!!!

### அமரர் நாகராசா கருணாவதி

(பெண் பரிசாரகர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் பதினேழு அன்போடு பழகி
ஆரவாரமற்ற சுபாவம் தாங்கி
நீங்காத நினைவாய் எம்முள்ளே ஆழ்ந்து
சேர்ந்து பணியாற்றிய கருணா!!
உம் பிரிவால் மனம் வெந்து விழிசிந்துகின்றோம்.
திடீர் பிரிவால் துயருற்றிருக்கும்
கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

(சி-40467) (24-18-45)

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

சிறுபணியாளர்கள்,
தொழிலாளர் ஓய்வு விடுதி நூலகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| வையகத்துள் | வானுக்குள் |
|---|---|
| 20 - 10 - 1923 | 29 - 01 - 2004 |



### அமரர் நாகலிங்கம் வைத்திலிங்கம்

சீரோங்கும் பிரமாதி வருடச் சிறந்த தைத்திங்கள்
பேரோங்கும் பூர்வபக்க அட்டமிதனில் - வையம்புகழ்
மானியூர் மைந்தன் வைத்திலிங்கம் மருவினன்
மலரடி மேலென்றே
"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமதருமை ஒளிவிளக்கே! எம்மை ஆசீர்வதிப்பீர்களாக.

*"ரசத கிரி",*
*மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.*

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


(40925)(26-18-45-24)

## 8ஆம் ஆண்டு நினைவினில்

### சீவரத்தினம் உதயகுமார்

(கலட்டிக் கண்ணன்)

திதி: 17.01.2005



| அன்னை மடியினில் | அரக்கன் பசியினால் |
|---|---|
| 31.08.1964 | 16.01.1997 |

வக்கிர குணம் கொண்டோன் – பசியினால் உடலை
வதை வதைத்து – எடுத்துச் சென்றே
நாவிரண்டு ஆண்டுகள்
சென்றது உடல் தானையா உயிரல்ல!!

என் பிராண நாயகா – உந்தன்
பிரிவு எனை வதைக்கின்றது – ஆனால்
உந்தன் ஆசைகள் எல்லாமே – கோகுலத்தில்
அரங்கேற – உந்தனாசியுடன்
அரங்கேறத் துளிர் விடுகின்றது
துளிர்கள் எல்லாமே பூத்துக் குலுங்கி
புது வாசனை வீசிட உந்தனுயிர்
எம்முடனிருந்து ஒளி கொடுக்கின்றதையா!!!
அப்பா!!!

காலங்கள் தான் கரைகின்றன – உங்கள்
கனவுகள் எல்லாம் நனவாக்க – நாம்
அல்லும் பகலும் அரும்பாடுபட்டு
அவனியில் பெயர் தாங்க – உங்கள்
அன்பான ஆசீர் வாதத்தினால் – கொண்ட
இலட்சியத்தின் குறி தவறாது
பார் போற்ற வாழும் பாலகர் நாம் அப்பா!
இலக்கணம் மாறுமா?
இலக்கியம் மாறுமா? – அப்பா உங்கள்
இலட்சியமும் மாறுமா?

கண்ணா!!!
நாங்கள் தான் துரித கதியில்
நகர்கின்றது – உந்தன்
கோகுலத்தில் – உந்தனாசியினால்
கன்றுகள் குதூகலிக்கவும் – அதைப்
பார்த்து ரசிக்கும் கண்ணா
உன் சிரிப்பொலி எமக்கு
ரீங்காரமிடுகிறதடா...
பார் போற்ற உன் செல்வங்கள் வாழ – உந்தன்
பார்வை ஒன்றே போதுமடா!

எம்முடனே இருக்கும் உந்தன் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*"கோகுலம்",*
*91, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- கலட்டிக் கண்ணன் குடும்பத்தினர்

(40927) (24-18-45)

## இவரைக் காணவில்லை



### செல்வன் சிவஜெயந்தன் அபிஷேகன்

(கோயில்குடியிருப்பு - முல்லைத்தீவு, வயது - 8)

இவர் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் முல்லைத்தீவிலிருந்து வந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கிளிநொச்சி மகாவித்தியாலய நலன்புரி நிலையத்தில் விடப்பட்டபோது இவர் காணாமற்போய்விட்டார்.

யாரோ ஒருவர் தவறுதலாகவோ அல்லது பராமரிப்பிற்காகவோ அழைத்துச் சென்றுள்ளதாகக் கருதுகின்றோம். தாயை இழந்து தவிக்கும் இவரது 4 வயது தங்கையினதும் மேற்படி சிறுவனினதும் மனநிலையைக் கருத்திற்கொண்டு மனிதாபிமான ரீதியில் - நேர்மை, நீதி, நியாயத்தின் அடிப்படையில் இச்சிறுவனைக் கீழ்க்காணும் முகவரிகளுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவுமாறு பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**இவரை எம்மிடம் ஒப்படைப்பவர்களுக்கு அல்லது இவர்பற்றிய சரியான தகவல் முதலில் தருபவர்களுக்கு ரூபா ஒரு லட்சம் (1,00,000) சன்மானமாக வழங்கப்படும்.**

சி.சிவஜெயந்தன் (தந்தையார்)
கச்சேரி,
முல்லைத்தீவு.

எஸ்.ஜெயகணேஸ்,
றெக்கோட் அலுவலர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்,
T.P.: 0776 540663,
021 222 3625

Dr.சி.சிவமோகன்,
அபிஷ தனியார் வைத்தியசாலை,
வவுனியா.
T.P.: 024 222 4574,
0777 237143, 024 222 1474

(40916)(39-18-45-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
29 - 07 - 1927



உதிர்வு
18 - 12 - 2004

## திருமதி சின்னத்துரை கண்மணி

உயிருள்ளவரை எமக்காய் வாழ்ந்தாய்
எம் உயிருள்ளவரை - அம்மா
உம்மை நாம் மறவோம்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
(40936)(30-11-15)
உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# 45ஆம் நாள் நீங்காத நினைவுகளுடன்...

வையத்துள் அறிமுகம்
13 - 08 - 1979



தெய்வத்துள் சங்கமம்
04 - 12 - 2004

## அமரர் வைரமுத்து றொபின்சன் (றொபின்)

(உரிமையாளர், சண் தையலகம், கண்டி வீதி, சாவகச்சேரி)

நண்பனே! எம்மை ஆண்ட றொபின் போனதெங்கே?
துன்பம் ஸ்ஓடி வந்தால் துயரமெல்லாம் துடைத்தே நின்றாய்!
தங்கமாய் வீசி எம்மையாண்ட உன் பண்பு எங்கே?
மங்காத உன் சிரிப்பு எமது கண்களில் மறையவில்லை!

உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.
(சி-40470)(11-15)
- நண்பர்கள்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்

வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணுலகில் பூவாய்
13 - 08 - 1979



விண்ணுலகில் ஜோதியாய்
04 - 12 - 2004

## அமரர் வைரமுத்து றொபின்சன் (றோஞ்சி)

(உரிமையாளர், சண் தையலகம், கண்டி வீதி, சாவகச்சேரி)

மாதம் ஒன்றைக் கடந்தாலும் ஆறவில்லை ~ எம்மனது
மாண்புடனே வாழ்ந்த உன் நினைவுடனே நாம் வாழ்கின்றோம்
எங்கே பார்த்தாலும் உன் முகம் தான் தெரிகிறது
வந்தோரை அன்பால் முகமலர்ந்து ~ வா என்று
அரவணைத்துச் சிரித்துப் பேசி துயரங்களைத் துடைத்தாய்
எம் நெஞ்சை நெகிழ வைத்துப் பண்போடு வாழ்ந்தாய்
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

04-12-2004 சிவபதமடைந்த எமது பாசமிகு மகன் வைரமுத்து றொபின்சனுடைய வீட்டுக்கிரியைகள் இன்று (17-01-2005) திங்கட்கிழமை அரவது இல்லத்தில் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி, பத்திரிகை, கண்ணீர் அஞ்சலி மூலம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி.
(சி-40469)(11-15)
- குடும்பத்தினர்.

# 33ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
07 - 04 - 1922



மறைவு
16 - 12 - 2004

## திருமதி சிவசுப்பிரமணியம் சிவக்கொழுந்து

நாலு தலைமுறையின் விருட்சம் நீ - ஆதலினால்
வாழ்வின் உன்னதங்கள் உன் - வசமாயின
சொர்க்க புரியும் சுக மாயமையச் - சொகுசாகச் சென்றவள் நீ
பரமன் பாதத்தில் அமைதிகொள்க!
ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி !

அன்னாரின் இல்லத்தில் இன்று (17.01.2005) திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் , தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்படன் அழைக்கிறோம் .

தொட்டிலடி, சங்கானை
T.P:-021 2225694
- குடும்பத்தினர்.

# கல்லடியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு, கல்லடியில் நேற்றுமுன்தினம் இரவு அடையாளம் தெரியாதவர்களால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் கல்லடி, வாகை மரத்தடியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு, பாரதிலேன், 2ஆம் குறுக்கத்தைச் சேர்ந்த பொன்னுத்தம்பி சகாயராஜ் (வயது-36) என்ற இளம் குடும்பஸ்தரே சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார். இவர் தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றின் மட்டக்களப்புக் கிளையில் பணியாற்றுபவராவார். (க-10)

# திட்டப் பணிப்பாளராக கேதீஸ்வரன் நியமனம்

யாழ். செயலக திட்டப் பணிப்பாளராக முன்னாள் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மருதங்கேணி, கோப்பாய், சாவகச்சேரி ஆகியவற்றின் பிரதேச செயலராகப் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் திட்டப் பணிப்பாளராகப் பணியாற்றிய பு.சுந்தரம்பிள்ளை ஓய்வு பெற்றுள்ளதை அடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (10-31)

# காணாமற் போய்விட்டன!

கைதடி, நாவற்குழி தெற்கு, கைதடியைச் சேர்ந்த கதிரமலை சீனிவாசகம் என்பவருடைய தங்கப் பவுண் நகைகள்:

1½ பவுண் டைமன் செயின் 1
1½ பவுண் காப்பு 1
1 பவுண் கைச்செயின் 1
1 சோடி சிவப்புக் கல் தோடு
1 சோடி பாஸ்கற் தோடு
1 சோடி பிளேன் தோடு
1 சோடி முத்துத் தோடு
1 சோடி ஒட்டிய தூக்கணத் தோடு

என்பன 11.01.2005 முதல் காணாமற் போய்விட்டன. இதுபற்றித் தகவல் தெரிந்தவர்கள் 077046690, 0212225883 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். (40432)

# பதவி வெற்றிடம்

கணன வேலை செய்யக்கூடியவர்களும் தொலைத் தொடர்பு நிலைய இயக்குநரும் தேவை.
தொடர்பு: G.M.K.Communication
302, Temple Road,
Nallur, Jaffna.
T.P.: 021 2223760, 4591194
(40928)(30)

# ஒத்து மாறல்

கிளிநொச்சி வலயக் கலைப் பட்டதாரி ஆசிரியரொருவர் யாழ். மாவட்டம் அல்லது கொழும்பு மாவட்டத்தில் நிர்வாகத்துறையில் அல்லது ஆசிரியத்துறையில் நியமனம் பெற்றவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு: 0776183193
(40471)(30)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

- அர்ஜுன் (இருவேடம்)
- லைலா
- வடிவேல் நடித்த

ஜெய் சூர்யா



காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு. இரவு 8.45
ANACONDA - 2
(C/39654)

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
பிரசாந், சினேகா, வடிவேல்,
மஞ்சுளி நடித்த
ஆயுதம்



கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயனதாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்
ஐயா இயக்குநர் ஹரி



காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன்
[illegible] 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே.)
[illegible]
நாகம்ஸ் சினிமா.
(C/39654)

# கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியரான
திரு.யூட்பிளேவியன அவர்களின்
அன்புத் தந்தையார்

## மாரியாம்பிள்ளை தார்சீசியஸ் (சின்னத்தம்பி)

அவர்கள் 15.01.2005 அன்று மீளாத்துயிலுக்குள்ளான துயரில் பங்கெடுத்து, எமது மனமார்ந்த ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், அன்னாரின் ஆன்ம இளைபாற்றிற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

No.39,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (40334)((11-15-30)
முகாமையாளரும் ஊழியர்களும்,
யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்டெட்.

# மரண அறிவித்தல்கள்

## குருசுமுத்து மரியநாயகம் (சேவியர்)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட M.K.மரியநாயகம் அவர்கள் 11.01.2005 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குருசுமுத்து - மரியை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனி - மரியாச்சி தம்பதிகளின் மருமகனும் அன்னம்மா (தங்கம) அவர்களின் அன்புக் கணவரும் றோஜர் கிளெட்வின் (பொபி - பிரான்ஸ்), றொஜினாகிளாறின் (விஜயா), றினோலி குயின்சி (ஜெயா - புத்தளம்), றூபின்மாறி (பௌசியா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தி (பிரான்ஸ்), பிரான்சிஸ் (மக்கள் வங்கி - யாழ்.), வினுஷ் (புத்தளம்) ஆகியோரின் அருமை மாமனாரும் பற்றிக், டேனியல், டெலினா, பிளேவியர் (ஜேர்மனி), மறின்யூலியா (அங்கி - பிரான்ஸ்), றொபின்சன் (டென்மார்க்), டிக்ஸன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிறிஸ்ரோப்பர், யசிந்தா (லீலி), பிலோமினா அக்கினஸ் (ஜேர்மனி), றூபி (டென்மார்க்), மாலா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் அஜய், விதுஷா, குல்ஷான், சாரா, றொதோலின், றொதோல்வ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10, ஈச்சமோட்டை, பீச் றோட்,
பாஷையூர், யாழ்ப்பாணம். (40933)(11-15-30)
தகவல்:
மருமகன் (பிரான்சிஸ்).

## திருமதி தருமகுலசிங்கம் சற்குணாதேவி

வீரபத்திராயன், கரணவாய் தெற்கைச் சேர்ந்த திருமதி தருமகுலசிங்கம் சற்குணாதேவி நேற்று (16.01.2005) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மயில்வாகனம் - கமலாம்பிகை தம்பதிகளின் மகளும் தருமகுலசிங்கம் (விவசாயத் திணைகளம் - திருநெல்வேலி) அவர்களின் அன்பு மனைவியும் துஷ்யந்தி (யாழ். மாநகரசபை), துஷாந்தன், துவாரகா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2005) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் சோனப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திராயன்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(சி-40474)(30-11-15)
தகவல்:
வீ.தருமகுலசிங்கம்
(கணவர்).

## வைரவன் சின்னத்தம்பி



பிரபல சோதிடர் வைரவன் சின்னத்தம்பி அவர்கள் நேற்று (16-01-2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவிப்பிள்ளை - கண்ணாத்தையின் மூத்தமகனும் காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-01-2005) திங்கட்கிழமை துரை வீதி, இணுவில் தெற்கு இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

துரை வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.
(சி-40473)(11-15)
தகவல்:
மகன் வைகுந்தநாதன்
மற்றும் பிள்ளைகள்.

## கதிர்காமநாதன் ஆனந்தகுமார் (சூட்டி)

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த கதிர்காமநாதன் ஆனந்தகுமார் (சூட்டி) அவர்கள் நேற்று (16-01-2005) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நீர்வேலியில் நடைபெறும் திகதி பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி. (சி-40472)(11-15)
தகவல்:-
இ. கதிர்காமநாதன் (தந்தை).

## திருமதி நடராசா மகேஸ்வரி

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி நடராசா மகேஸ்வரி அவர்கள் நேற்று (16.01.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும் சிவமணி, இராசமணி, கமலா, விஜயராணி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தளையசிங்கம் மற்றும் சின்ராசு, இராசேந்திரம், சுகந்தரராஜா, சுசந்தி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (40937)(11-15-30)
தகவல்:-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிட்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு

கரவெட்டி,ஜன.17

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட வங்கக் கடலில் காவிய மான பத்து வேங்கைகளின் பன்னிரண்டாவது நினைவுதினம் தமிழர் தாயகத்தில் நேற்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

**தீருவிலில்**

பிரதான நிகழ்வுகள் வல்வெட்டித்துறை தீருவில் சதுக்கத்தில் உள்ள கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவாலயத்தில் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் நேற்றுமாலை 6.30 மணியளவில் ஆரம்பமாகியது.

நிகழ்வில் பொதுச்சுடரை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன் ஏற்றினார். நினைவுரைகளை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, மற்றும் பலர் நிகழ்த்தினர். நிகழ்வில் அதிக அளவிலான பொதுமக்களும் போராளிகளும் கலந்து கொண்டனர்.

**கிட்டுப்பூங்காவில்**

யாழ். நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் தலைமையில் மாலை 5.30 மணிக்கு நல்லூர் முத்திரைச்சந்தையில் உள்ள கிட்டுப் பூங்காவில் ஆரம்பமான நினைவு நிகழ்வில் பொதுச்சுடரை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் பலர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் உருவப் படங்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. கேணல் கிட்டுவின் உருவப்படத்துக்கு அவரது உறவினரான திருமதி வேலுப்பிள்ளை லங்காதேவி மலர்மாலை அணிவித்தார். நினைவுரைகளை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உட்படப் பலர் நிகழ்த்தினர்.

**கோப்பாயில்**

கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல நிர்வாக உறுப்பினர் சுதாகரன் தலைமையில் நேற்றுக் காலை 9 மணியளவில் துயிலுமில்லத்தில் நடைபெற்ற நினைவுநிகழ்வில் யாழ். மாவட்ட கலை. பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் வளநாடன் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து பத்து வேங்கைகளின் கல்லறைகளுக்குப் பொது மக்களும் போராளிகளும் மலரஞ்சலி செய்தனர். (0-70-173-7-13-30-86-31)



கிட்டுப் பூங்காவில் நடந்த அஞ்சலியில்...

## மாணவர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.17

சுனாமி அனர்த்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ள மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான தரவுகள் திரட்டப்படவுள்ளன. இந்தத் தரவுகள் அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளில் இன்றும் நாளை செவ்வாய்க் கிழமையும் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பின்வரும் பாடசாலைகளில் திரட்டப்படவுள்ளன.

முல்லைத்தீவு ம.வி., முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி, செம்மலை ம.வி., சிலாவத்தை அ.த.க. பாடசாலை, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, உடுத்துறை ம.வி., மருதங்கேணி அ.த.க. பாடசாலை, ஆழியவளை ம.வி., வெற்றிலைக்கேணி அ.த.க. பாடசாலை, பூலோலி மெதடிஸ்த மிஷன், வட. இந்து மகளிர் கல்லூரி, வல்வை சிவகுரு ம.வி. ஆகிய பாடசாலைகளிலேயே தர்வுகள் திரட்டப்படவுள்ளன. (10)

## புலிகள் வசம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைமடுக் குளத்துக்கு கிழக்கே புலிகள் புதிய விமானம் ஓடுபாதையை அமைத்துள்ளதை அவதானித்துள்ளது என வவுனியா விலுள்ள விமானத்தின் கட்டளை மையம் இனங்கண்டுள்ளது.

1,250மீற்றர் நீளமான ஓடுபாதையாக அது காணப்படுகின்றது. சரக்குகளை ஏற்றியிறக்கும் சி-130 விமானம் ஒன்று எந்தப் பிரச்சினையும் இன்றி தரையிறங்கிச் செல்லக்கூடிய வகையில் இந்த விமான ஓடுபாதை வசதியாக அமைக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர். புலிகளால் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தது என்று செய்மதிப் படங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விமான ஓடுதளத்தின் அருகிலேயே இந்தப் புதிய ஓடுதளமும் அமைக்கப்பட்டுள்ளது என்கிறது இராணுவம்.

கடந்த சில வருடங்களுக்குள்ளேயே இந்தப் புதிய ஓடுதளத்தை புலிகள் வடிவமைத்துள்ளனராம். இந்த விமான ஓடுபாதையில் ஒருவர் ஓட்டக்கூடிய ஆறு ஆசனங்கள் கொண்ட சிறியரக விமானம் தரித்து நின்றதை உளவு விமானம் புதன்கிழமை படம் பிடித்துள்ளது. மீண்டும் அடுத்த நாள் வியாழக்கிழமை இரவு வன்னி வான்பரப்புக்கு உளவு விமானத்தை பறக்கவிட்டுள்ளனர் அதிகாரிகள்.

அப்போது அதே ரகமான ஆனால், உருவத்தில் வேறுபட்ட இன்னொரு விமானமும் அங்கு தரித்து நின்றதை உளவு விமானம் படம் பிடித்துள்ளது என விமானப்படையினர் தெரிவித்துள்ளனர்.

புலிகளிடம்விமானம்உள்ளவிவகாரம்தற்போது பாதுகாப்பு அமைச்சுக்கு உறுதியாகிவிட்டதால் இது குறித்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி புரிய இலங்கையில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டு இராணுவத்தினருக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ராடர் கண்காணிப்பைத் தாண்டி இந்த இரு விமானங்களையும் புலிகள் எப்படித் தமது பகுதிக்குள் கொண்டுவந்தார்கள் என்று மண்டையைப் பிய்த்துக்கொள்கின்றது விமானப்படை. பொதுவாக கட்டுநாயக்கா மற்றும் ரத்மலானை விமான நிலையங்களில் உள்ள ராடர் கருவிகளால் 60 கடல் மைல் சுற்றளவு பிரதேசத்தை முன்னர் கண்காணிக்க முடிந்தது. ஆனால், கொழும்பில் தற்போதுள்ள ராடர் தளத்தில் 200 கடல் மைல் தூரத்தை கண்காணிக்க முடியும். ஏனெனில், அது பேதுருதாலகால மலையில் நிறுவப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் புலிகளின் விமானங்கள் எப்படி நாட்டுக்குள் புகுந்தது என்று அதிகாரிகள் குழம்பிப் போயிருக்கிறார்கள். இல்லையேல் இந்த விமானங்களை உதிரிப்பாகங்களாகக் கொண்டு வந்து புலிகள் பொருத்தினார்களா என்ற சந்தேகம் அவர்களுக்கு இருக்கிறது. (எ-க)

## அவசரகாலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் இந்த அவசரகாலநிலை ஜனவரி 4ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என அவர் அறிவித்துள்ளார். வர்த்தகமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியாகும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு, தென்மாகாணம், வடமத்திய மாகாணம், மேல் மாகாணம் உட்பட நான்கு மாகாணங்களிலும் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் அவசரகாலநிலை நடைமுறைப் படுத்தப்படும். பொதுமக்களின் சொத்துக்களைப் பாதுகாக்கவும், முறைகேடுகளைத் தவிர்க்கவும், கொள்ளைகளைத் தடுக்கவும், நிவாரணப் பணிகளை உறுதிப்படுத்துவதற்காகவுமே அவசரகால நிலை என ஜனாதிபதி கூறுகின்றார்.

இதனால் இராணுவத்தினரும், பொலீஸாரும் சிவில் நிர்வாகத்தில் தலையிடவும், கூடுதலான தண்டனைகளை வழங்கவும், அவர்களுக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னறிவித்தல் இல்லாத கைதுகள், காலவரையறையின்றி தடுத்துவைத்தல், திடீர்ச் சோதனைகள், என்பவற்றை மேற்கொள்வதற்கான அதிகாரங்களை இராணுவத்தினருக்கும், பொலீஸாருக்கும் அவசரகால நிலை வழங்கியுள்ளது. குறிப்பாக வங்கிக் கணக்குகளை முடக்கி வைக்கவும், சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

அவசரகால நிலையால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் நேரடியாகத் தாக்கத்துக்குள்ளாகி உள்ளன.

ஏற்கனவே, நிவாரணப் பொருள் விநியோகம் மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் நேரடி நிர்வாகப் பொறுப்பு ஜனாதிபதியால் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டவென அவசரகால நிலையை ஜனாதிபதி பயன்படுத்தியுள்ளார். ஜனாதிபதியின் இந்தச் செயல் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்குப் பெரும் பீதியையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது நாட்டில் மீண்டும் போர்ப்பீதியையும், மரண பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சோதனைச் சாவடிகளும், திடீர்க் கைதுகளும் அதிகரிக்கும் என்று மக்கள் அஞ்சுகின்றனர். அரசின் இந்தச் செயலை தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக எதிர்ப்பது எனவும் தீர்மானித்துள்ளன. (எ-க)

## மந்திகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கக் கடற்படை மருத்துவக் குழுவின் பேச்சாளரான முதலாவது லெப்டினன்ட் எரிக் ரவுஸ் தெரிவித்திருக்கின்றார்.

பொதுவாக அனர்த்தம் பாதித்த பிரதேசங்களில் கள மருத்துவ நிலையங்களை அமைத்தே தாங்கள் பணிபுரிவது வழக்கம் என்றாலும் ஏற்கனவே உள்ள ஒரு மருத்துவ நிலையத்துடன் இணைந்து எங்கள் சேவையை இங்கே வழங்க உள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பணிபுரியவுள்ள அமெரிக்கக் குழுவினர் எடுத்து வந்துள்ள சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஏனைய சாதனங்களுடன் சுமார் ஒரு லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியானவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசு கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் மருத்துவ நிவாரணப் பணியுடன் ஏனைய நிவாரண நடவடிக்கைகளிலும் ஈடுபட தாங்கள் தயாராக இருப்பதாக அமெரிக்க மருத்துவர் குழு தெரிவித்திருக்கிறது. (ஜ-173)

## சர்வதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடியான போர்ச்சூழலிலும் தற்போதைய சூழலிலும் உலக உணவுத்திட்டம் எமது பிரதேசத்தில் பல பணிகளைச் செயற்படுத்தி வருகின்றது.

தற்போதைய சூழலில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி மனிதநேய நிவாரணப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியமர்வு தொடர்பிலான பல விடயங்கள் இன்றைய சந்திப்பில் ஆராயப்பட்டன.

தற்போது மாவட்ட மட்டத்தில் செயலணிக் குழுக்களை அமைத்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக, புலம்பெயர்ந்த மக்களின் உதவிகள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி மனிதநேய நடவடிக்கைகளை நாம் காத்திரமாக மேற்கொண்டுவருகின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கிய உதவிகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இந்தக் கட்டத்தில் சர்வதேச சமூகம் உதவிகளை நேரடியாகத் தமிழர் பிரதிநிதிகளிடம் வழங்க முன்வரவேண்டும் என நாம் உடனடியாகக் கோரிக்கை விடுக்கிறோம்.

பாதிக்கப்பட்ட மக்களின் தற்காலிகக் குடியிருப்புகள், சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை நிறைவேற்றும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மக்களை நிரந்தரமாகக் குடியேற்றும் நடவடிக்கை மூன்றாம் கட்டமாக மேற்கொள்ளப்படுகின்றது. இது மிகவும் சவால்கள் நிறைந்த பணி - இவ்வாறு அவர் குறிப்பிட்டார். (எ-க-13)

## ஐ.நா. சிறப்புப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட வடமராட்சி வடக்கு கரையோரப் பிரதேசங்களைப் பார்வையிட்ட இவர்கள் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதிகளைச் சந்தித்து சேதவிவரங்களையும் கேட்டறிந்தனர்.

ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி பேமியோ நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்திருந்தார். அங்கிருந்து நேற்று வடமராட்சிக்கு வந்த அவர் நேற்றுப் பிற்பகல் விமானம் மூலம் கொழும்பு திரும்பினார். (ஜ-173-70)

## சர்வதேசத்தின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த காலங்களில் எமக்கு ஏற்பட்ட அனுபவங்களை மையமாக வைத்துப் பார்க்கையில், நிவாரண உதவிகளை வழங்கும் விடயத்தில் அரசின் நடவடிக்கையில் நாம் சந்தேகம் கொள்ள நியாயமான காரணங்கள் உள்ளன. ஆகவே, நிவாரண உதவிகள் சமமாகப் பகிர்ந்தளிக்கப் படுவதை உறுதிப்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களை நாம் வேண்டிக் கொள்கின்றோம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், அவர்களை மீளக் குடியமர்த்தவுமென அரசால் மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகளில் உள்ளூர் பங்களிப்பு ஏதுமில்லை.

இது தொடர்பாக அரசின் முழுக் கவனமும் மத்தியில் குவிப்பதாகவே அமைகிறது. இதில் உள்ளூர் பங்களிப்பு மருந்துக்கும் இல்லை. முடிவுகள் எடுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் கூட உள்ளூர் பங்கேற்பு அறவே இல்லை.

நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், அதற்குத் தேவையான பயனுடைய மற்றும் துரிதமான திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் இந்தநிலை ஆக்கபூர்வமான ஒன்றல்ல. அரசின் செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மையும், பொறுப்புணர்வும் குறைவாகவே காணப் படுகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருள்களை வழங்குவதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் முனைப்பாகவும் சுறுசுறுப்பாகவும் செயற்படுகின்றன. யுத்தகாலத்தில் இருந்து இவர்கள் இவ்வாறான நிலைமைகளைச் சமாளிக்கும் ஒரு சக்தியாகவே திகழ்கின்றனர்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் புலிகளின் இந்த நடவடிக்கை சமாதான முன்னெடுப்புக்களைப் பாரியளவில் பலப்படுத்தும். அவ்வாறான நடவடிக்கைகள் வடக்கு - கிழக்கில் தொடர்ந்தும் பலமடைவதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்தவேண்டும்.

நலன்புரி நிலையங்களைக் கொண்டு நடத்த 100வீதம் சிங்களவர்களையே கொண்ட இராணுவத்தினரை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது. யுத்தகாலத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தமிழர்கள் அதிக அசௌகரியங்களை அடைந்துள்ளனர். அப்படி இருந்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் தமிழர்களைக் கொண்டுவர அரசு எண்ணுவது தமிழ் மக்களின் மனிதநேய உணர்வுக்கு முரணான நடவடிக்கை என்பதற்கு தெளிவான எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தைக் கையாள்வதில் ஐக்கியம், நல்லுறவை கட்டியெழுப்புதல் என்பனவற்றுக்கு அவ்வறிக்கை குந்தம் ஏற்படுவதை எடுத்துக்காட்டுகிறது - எனக் கூறினர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் கூறுகையில்:-

ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுகின்ற உதவிகள் சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதில் நாம் மிகவும் அவதானமாக இருப்போம். முறைப்பாடுகளுக்கு இடமளிக்காத வகையில் செயற்படுவோம் - எனத் தெரிவித்தார்.

இச்சந்திப்பு சுமுகமாக இடம்பெற்றதாகவும், இதன்போது அதிகமாகத் திருப்தியடைந்துள்ளனர் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். (எ-க)

## மோ.சைக்கிள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டை இழந்து தூக்கி வீசப்பட்டது என்று கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிளின் பின்பக்கத்தில் இருந்து பயணம் செய்தவர் தலையடிபட வீழ்ந்ததில் உயிரிழந்தார்.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த குடும்பஸ்தரான கதிர்காமநாதன் ஆனந்தகுமார்(வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரான - நீர்வேலியைச் சேர்ந்த - ஆர்.சண்முகநாதன் (வயது 42) என்பவர் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

இறந்தவரின் சடலம் மரண விசாரணை மற்றும்பிரேதபரிசோதனைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கிறது. (ஐ-க)


**ஆங்கில வகுப்பு**

ஆங்கில இலக்கணம் பல்கலைக்கழக மாணவியால் கற்பிக்கப்படும்.
சனி, ஞாயிறு வகுப்புகள் (25.01.2005) தைப்பூசத்தன்று ஆரம்பமாகும் (நேரம் 3.00 மணி). (ஆண்டு 9-11வரை)
மலரகம், மடம் ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.
(40596)

மீண்டும் சேவையில்

**மொடேண் கொஸ்பிற்றல்**

ஆறுகால்மடம்.

கடந்த 15ஆண்டு காலமாக இரவு பகலாக அரும் பணியாற்றிய மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் மொடேண் கொஸ்பிற்றல் சிறிதுகால இடைவேளையின் பின்னர் சகல வசதிகளுடனும் இப்போது மீண்டும் இயங்குகின்றதென்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
(40856) - நிர்வாகம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org